விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 18 திங்கட்கிழமை (02.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 14

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# எதிர்க்கட்சிகளுடன் இணையுமாறு அரசுக்கு இந்தியா வலியுறுத்தல்


## இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண

(புதுடில்லி)

முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாணுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் அரசியல் கட்சிகள் பிரதேச ஒற்றுமை, ஐக்கியம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டால் தாம் இனப்பிரச்சினை விடயத்தில் ஆதரவு தெரிவிப்பது குறித்து ஆராய முடியுமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

இருந்த போதும் இலங்கையின் சமாதான முயற்சிகளிலோ, இணைத்தலைமை நாடுகளில் ஒன்றாகவோ இந்தியா நேரடியாக பங்கேற்க இயலாது எனவும் அவர் கூறியுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## 53 தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து தடுத்துவைப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின் போது கைதுசெய்யப்பட்ட 53 தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தங்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் எதனையும் வைத்திருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளை இராணுவத்தினரும் பொலிஸாரும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்தி ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை கைது செய்து பின்னர் 53 பேரைத் தவிர ஏனைய அனைவரையும் விடுதலை செய்தனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைவரும் பொலிஸாரினால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## வரணியில் நேற்றுத் தாக்குதல் இரு சிப்பாய்கள் படுகாயம்

### இராணுவம் தாக்கியதில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வரணியில் இராணுவத்தினர் மீது நேற்று மதியம் 12 .30 மணியளவில் நடாத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

வரணி சந்தைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வீசப்பட்ட கைக்குண்டு 52-4 படைப்பிரிவின் தலைமையாக நுழைவாயிலிருந்து 100 மீற்றர் தொலைவில் வீழ்ந்து வெடித்துள்ளது. இதன்போது காயமடைந்த இருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராணுவத்தினர் மீதான கிரனைட் தாக்குதலினையடுத்து அப்பாதை சில மணி நேரம் மூடப்பட்டது. அதனையடுத்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இச் சுற்றிவளைப்புத் தேடுதலின்போது இராணுவத்தினரால் தாக்கப்பட்ட இருவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த சின்னையா உதயகுமார் (வயது 29) ,வரணி மகா வித்தியாலய மாணவன் சத்தியதாசன் சத்தியரேஜன் (வயது 18) ஆகிய இருவருமே படுகாயடைந்தவர்களாவர். (ச-101,109)

## காயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு முன்பாக கடந்த டிசெம்பர் மாதம் முதலாந் திகதி இனந் தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமையினால் யாழ்.போதனாவைத்தியசாலையில் நேற்று மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சிவரூபன் (வயது 25) என்பவரே மரணமானவரார். கடந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## புளொட் உறுப்பினர் வவுனியாவில் கடத்தல்

(வவுனியா)

வவுனியாவில் புளொட் உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் வேப்பங்குளத்திலுள்ள அவரது வீட்டிற்குச் சென்ற சிலர் தாம் பொலிஸார் எனத் தெரிவித்து அவரை அழைத்து பின்னர் வெள்ளை வானில் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

புளொட் இயக்க உறுப்பினரான கிருஷ்ணசாமி திருநாவுக்கரசு (வயது 29) என்பவரே கடத்தப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச)

## கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைது மலையக மக்கள் முன்னணி கண்டனம்

(கொழும்பு)

கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமைக்கு மலையக மக்கள் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். தமிழ் மக்கள் என்ற ஒரேகாரணத்திற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் கைது நடவடிக்கைகள் தமிழ்மக்களை ஒட்டுமொத்தமாக அவமானமடையச் செய்யும் நடவடிக்கையாகவே அமைந்து விட்டது. புதுவருடப்பிறப்பின்போது தமிழ் மக்களை உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உள்ளாக்கவேண்டுமென்பதற்காகவே இந்தக் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதோ என மலையக மக்கள் முன்னணி கருதுகின்றது.

இந்த மக்கள் கைதுசெய்யப்படும் முறை, அதன் பின் நடத்தப்படும் விதம், இவர்களின் மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத தன்மை, இவற்றை சர்வதேச சமூகம் உன்னிப்பாகவும் மனிதாபிமானமாகவும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இதுபோன்ற இன அடக்கு முறை அல்லது பழிவாங்கல் தொடர்ந்து நடக்குமாயின் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும் கொந்தளிப்புக்கு அரசு முகம்கொடுக்கவேண்டி வரும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பதற்ற நிலைமைகளை ஆராய்வதற்கு விசேட தூதுக்குழுவினர் யாழ்.வருகை

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை ஆராயும் பொருட்டு ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் சிறப்புத் தூதுக்குழுவொன்று எதிர்வரும் 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது. இக்குழுவிற்கு ஜனாதிபதியின் செயலாளர் லலித் தலைமையிலான மூவர் கொண்ட குழுவினரே யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். யாழ். வரும் அவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை தொடர்பாகவும், கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராய்ந்து ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ,யாழ்.பல்கலைக்கழ துணைவேந்தர் சு.மோகனதாஸ் ,மாணவப் பிரதிநிதிகள் ,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து பதற்ற நிலைமைகளை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளனர்.

லலித் வீரதுங்க தலைமையிலான குழுவில் ராடா அமைப்பின் தலைவர் டிரான் அலஸ், கல்வி அமைச்சின் செயலாளர் ஆரியரத்தின கேவகே ஆகியோரும் அடங்குகின்றனர். இதேவேளை தமது யாழ்.விஜயம் குறித்து இன்னமும் தெளிவான முடிவு எதனையும் எடுக்கவில்லை என லிலித் வீரதுங்க தெரிவித்தார். (ச-8)

# இலங்கைத் தமிழர்களின் உயிர்ப்பாதுகாப்புக்கான உத்தரவாதத்தை பெற்றுத்தர சுவிஸ் நடவடிக்கை

## எடுக்குமாறு சுவிஸ் தமிழ் அமைப்புக்கள் வலியுறுத்து

(பேர்ண்)

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் மக்களுக்கான உயிர்ப் பாதுகாப்பை ஸ்ரீலங்கா அரசு உத்தரவாதப்படுத்த சுவிஸ் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுவிஸ் தமிழ் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் ஸ்ரீலங்கா நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்கள் மற்றும் தமிழ் மக்களுக்கான உயிர்ப் பாதுகாப்பை ஸ்ரீலங்கா அரசு உத்தரவாதப்படுத்த சுவிஸ் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுவிஸ் தமிழ் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பாக சுவிஸ் அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுவிஸ் நாட்டின் பேர்ண் மாநிலதத்தில் கடந்த 27ஆம் திகதி அமைதி ஒன்றுகூடல் நடைபெற்றது. இந்த ஒன்றுகூடலைத் தமிழ் இளையோர் அமைப்பு, சுவிஸ் தமிழர் இல்லங்கள், பெண்கள் அமைப்பு, தமிழ் மாணவர் ஒன்றியம், சுவிஸ் ஊடகப்பணிமனை ஆகியவை ஒருங்கிணைந்து முன்னெடுத்தன.

இந்த அமைதி ஒன்று கூடலில் சுவிஸின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தமிழ் மக்கள் கலந்து கொண்டு தமிழர் தரப்பு நியாயங்களை வெளிப்படுத்தியிருந்தனர். கடுமையான குளிர் காலநிலையிலும் சுவிஸ் நாடாளுமன்றப் பகுதியில அமைந்திருக்கும் வெளிவிவகார அமைச்சகம், மத்திய காவல் துறை மையம், சர்வதேச உலாசப் பயணிகள் பார்வையிடும் மணிக்கூட்டுக் கோபுரம் என்பன அமைந்துள்ள மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கக்கூடியதுமான பகுதியில் பிற்பகல் 13.30மணிக்கு இந்த ஒன்றுகூடல் தொடங்கியது.

இந்த அமைதி ஒன்றுகூடலில் படுகொலை செய்யப்பட்ட ஜோசப் பரராஜசிங்கம் நிைனவுப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் வலயம் வைத்து, கைகளில் மெழுகுவர்த்தியைத் தாங்கி வணக்கம் செலுத்தப்பட்டது.

கண்டனப் பதாதைகள் தாங்கிய தமிழ் மக்கள், புங்குடுதீவில் தர்சினி மீதான பாலியல் படுகொலை, யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் மீதான இராணுவத் தொடர் தாக்குதல்கள் என்பவற்றைக் கண்டித்தும் இத்தாக்குதல்களை நிறுதக் கோரியும் இராணுவ வன்முறைகளுக்கான நீதியான விசாரணைகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியும், இராணுவ வன்முறைகளுக்கு எதிராக சுவிஸ் அரசாங்கம் சர்வதேச சமூகம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனக்கோரி சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மிசேலின் கலமிறேய் அம்மையாரிடம் மனுக் கையளித்தனர்.

தமிழ் மக்கள் மீதான இராணுவ வன்முறைகள் குறித்த வீடியோ காட்சிகளை சுவிஸ் கல்வி அமைச்சராக உள்ள சாமுவேல் சிமித்திடம் கையளித்தனர். எதிர்வரும் புதிய ஆண்டில் எம்மோடு தொடர்பினை ஏற்படுத்தி எமது பிரச்சினைகளைச் சந்திப்பு ஒன்றின் ஊடாகக் கேட்டறிந்த பின்னர் ஆவன செய்வதாகவும் மகஜரைக் கையளித்த தமிழ் அமைப்பு பிரதிநிதிகளிடம் சுவிஸ் அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

இந்த மனுக்களின் பிரதிகள் மற்றும் வீடியோ காட்சிகளின் ஜெனீவாவில் உள்ள அனைத்துலக மனித உரிமை ஒன்றியம், சுவிஸ் அரசாங்க அமைச்சர்கள் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் சுவிஸ் ஊடகங்கள். ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த அமைதி ஒன்று கூடலில் சிறப்பு விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்த அமைதி ஒன்றுகூடல் தொடர்பான செய்திகளையும் காட்சிகளையும் சுவிஸ் ஊடகங்கள் முதன்மைப்படுத்தி செய்திகளை வெளிப்படுத்தியிருந்தன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(ற)

### கடன் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை அடுத்த ஆறுமாத காலத்திற்குள் நிர்மாணிப்பதற்கு தேவையான உதவிகளை வழங்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்திவருகின்றது.

இதற்காக திறைசேரி அரசாங்கத்திற்கு கடன் வழங்கும் நடைமுறையை விரிவுபடுத்தியுள்ளது. வீடுகளை நிர்மாணிப்பதற்காக தற்போது வழங்கிவரும் கடன் தொகையை அதிகரிப்பதற்கும் திறைசேரி தீர்மானித்துள்ளது.

குறித்த 6மாத காலத்திற்குள் வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றதா? என்பதை கண்டறிவதற்கு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

### கொலைச் சதி;

## 5 இராணுவத்தினர் கைது

(வவுனியா)

கொலைச் சதியில் ஈடுபட்டதாக வவுனியா காவலரணில் பணிபுரிந்த 5 இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவிசாவளைப் பகுதியிலுள்ள ஒருவரை கொலைசெய்யும் நோக்கத்துடன் சுகவீன விடுமுறையில் சென்றபோது அப்பகுதி பொலிஸாரால அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியாவில் இராணு வீரர் ஒருவரைத் தாக்கியதாக கூறப்படும் பிரதேச சபை உறுப்பினரின் சகோதரர் ஒருவரை கொலைசெய்யச் சென்றபோது கடந்த 28ஆம் திகதி இரவு இவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தக் கொலைச் சதியுடன் தொடர்புடைய இராணுவத்திலிருந்து தப்பிவந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து துப்பாக்கியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அவிசாவளைப் பகுதியில் 8 இலட்சம் ரூபா மதிப்பிலான மாணிக்கக் கற்களை கொள்ளையடித்தவாகள் இந்தக் கும்பல்தான் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

### பயணிகள் குறைவு

ஊர்காவற்றுறையிலிருந்து பஸ்களில் குறைவாகவே பயணிகள் பயணம் செய்கின்றனர்.

சோதனைச் சாவடிகளில் பலத்த சோதனைகள் இடம்பெற்ற பின்னரே பயணிகள் தமது பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. (த-72)

## இராசி பலன்

**02.01.2006**

**(மார்கழி 18, திங்கட்கிழமை)**

**திருதியை பிற்பகல் 3.30மணிவரை**

**திருவோணம் பிற்பகல் 1.50 மணிவரை**

**இராகுகாலம் 3.17-4.47 மணிவரை**

**சுபநேரம் 10.47-12.17 மணிவரை**

- **மேடம்:** காரிய இடையூறு, புத்திரரால் கவலை, தன விரயம், வியாபார நன்மை.
- **இடபம்:** அற்பர் உறவு, ரோகபயம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம்.
- **மிதுனம்:** இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை, காரிய சித்தி.
- **கடகம்:** மதிப்புக்குறைவு, பொருள்விரயம், காரிய தாமதம், ரோகபயம்.
- **சிங்கம்:** ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயன சுகம், புதிய முயற்சி.
- **கன்னி:** உஷ்ண நிலை, பணவிரயம், தந்தை வழி உறவு, முயற்சி தாமதம்.
- **துலாம்:** தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம்.
- **விருச்சிகம்:** பெரியோர் உதவி, சுப நிகழ்வு, கடின முயற்சி, அதிகாரம்.
- **தனுசு:** உடல் உழைப்பு, அச்சமான நிலை, வயிற்றுக்கோளாறு, நிலை மாற்றம்.
- **மகரம்:** எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசன சுகம், அபகீர்த்தி.
- **கும்பம்:** வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, பண வருவாய், முயற்சி கைகூடும்.
- **மீனம்:** சுகவாழ்வு, திடீர்பயணம், காரிய நன்மை, போசன சுகம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

## தொற்று நோய் அபாயம்

(மந்துவில்)

இயல்பு நிலை பாதிப்படைந்து சிவில் நிர்வாகம் முறையர்க இயங்காததால் சாவகச்சேரி, கொடி காமம் சந்தைகளில் சேரும் கழிவுப் பொருட்கள் உரிய முறையில் உடனுக்குடன் அகற்றப்படுவதால் இச் சந்தைகளை அண்டிய பகுதிகளில் தொற்றுநோய் அபாயம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தினமும் மக்கள் புழக்கம் அதிகமாக உள்ள இச் சந்தைகளில் பழுதடைந்த மரக்கறி வகைகள் அப்புறப்படுத்தப்படாமல் சந்தை வளாகப் பகுதியிலேயே குவிந்து கிடப்பதால் அவை அழுகித் துர்நாற்றம் வீசுவதுடன் தொற்று நோய் பரவலுக்கும் காரணியாக விளங்குவதாகத் தெரிவிக்கும் சந்தைப் பாவனையாளர்களும், பொதுமக்களும், இக்கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அகற்றி, சுகாதாரம் பேண உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கூறுகிறார்கள்.

(து-102)

## புத்துயிர் பெறும் மைதானம்

(மந்துவில்)

தென்மராட்சியில் உள்ள தேசியப் பாடசாலையான சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் விளையாட்டு மைதானம் மணல் பறிக்கப்பட்டு செப்பனிடப்பட்டு வருகிறது.

இக் கல்லூரியானது அண்மையில் நடைபெற்ற வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 4 பிரிவுகள் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை தெரிந்ததே.

மாணவர்களின் விளையாட்டு செயற்பாடுகள் புத்தூக்கம் பெறும் வகையில் இவ் விளையாட டு மைதானம சிறப்பாக அமைய வேண்டும் என இக்கல்லூரி மாணவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இக் கல்லூரியின் வளர்ச்சி கருதி பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், கொடைவள்ளல்கள் ஆகியோர் இம் மைதானத்தில் அனைத்து விளையாட்டுக்களுக்குமுரிய தேவைகளை பூர்த்திசெய்து தர முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ற-102)

### வீதி மூடப்பட்டுள்ளது

(மந்துவில்)

கொடிகாமம்-பருத்தித்துறை பிரதான வீதியில் பிரதானமுகாம் அமைந்துள்ள வீதி கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் மூடப்பட்டு வீதியின் பழைய பாதை மக்கள்பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள் ளது.

வாகனப் போக்குவரத்து மக்கள் போக்குவரத்துக்கள் யாவும் முன்னர் பாவனையில் இந்த வீதிவழியாகவே நடைபெறுகின்றது. (ற-102)

# சிங்கள இராணுவ அராஜகங்களை கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

## சென்னையில் ஜன.3இல் இடம்பெறும்

(சென்னை)

ஈழத்தமிழர்களிற்கு எதிராக சிங்களப் படைகள் மேற்கொண்டுவரும் வெறியாட்டத்தைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை தமிழகத் தலைநகர் சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டன ஆர்ப்பாட்டம் நாளை 3ஆம் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

சிங்கள அதிபர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனவெறியாட்டம் கட்டுக்கடங்காத நிலையில் தலைதூக்கியுள்ளது. அப்பாவித் தமிழர்களையும், ஊடகவியலாளர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் போன்ற அரசியல் தலைவர்களையும் சிங்கள இராணுவம் படுகொலை செய்து வருகிறது.

அத்துடன, தர்சினி என்ற இளம் யுவதியை சிங்கள கடற்படையினர் பாலியல் வல்லுறவு கொணடு படுகொலை செய்துள்ளனர். இதனைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய யாழ்.பல்கலைக்கழக சமூகம் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை சிங்கள இராணுவம் நடத்தியுள்ளது.

இவ்வாறு தமிழினத்திற்கு எதிரான இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்ட சிங்கள அதிபா மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பேரரசுடன் நல்லுறவை வைத்துக்கொள்ளத் துடிப்பது தமிழகத் தமிழர்களையும் கேவலப்படுத்தும் முயற்சியாகும்.

இந்நிலையில், தமிழக முதல்வரையும் சந்தித்து பேசப்போவதாக அறிவிப்பு வந்ததைத் தொடர்ந்து விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்படடது. இந்த எதிர்ப்பைத் தொடர்ந்து மஹிந்தராஜபக்ஷவின் தமிழகப் பயணம் கைவிடப்பட்டது. இது விடுதலைச் சிறுத்தைகளுக்கும் தமிழ்த்தேசிய உணர்வாளர்களிற்கும் கிடைத்த வெற்றியாகும்.

மேலும், ஈழத்தில் இடம்பெறும் இராணுவ வெறியாட்டத்தைக் கண்டித்து 30.12.05இல் சென்னையில் நடத்துவதாக விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. சென்னை மாநகர காவல்துறை இவ்வார்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்துள்ளது. எனினும் ஈழத்தில் தொடரும் இராணுவ வெறியாட்டத்தைக் கண்டிக்கும் எமது ஜனநாயகத்தைப் பாதுகாப்பாதற்கான அறவழிப் போராட்டம் 3ஆம் திகதியன்று நடத்திட தள்ளிவைக்கப்படுகிறது. திட்டமிட்டபடி அன்று போராட்டம் உறுதியாக நடைபெறும். அப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் விடுதலைச் சிறுத்தைகளும் திரளாக பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொல்.திருமாவளவன் தலைமையில் இடம்பெறவுள்ள இப்போராட்டத்தில் கண்டன உரைகாளை கோ.க.மணி, வே.ஆனைமுத்து, தணிக்கையாளர் இளமுருகள், பெ.மணியரசன், தியாகு, சுபவீ, பாவலர்கள் இன்குலாப், அறிவுமதி, இயக்குநர்கள் வி.செ.குகநாதன், சீமான், தங்கர் பச்சான், புகழேந்தி உட்பட பலர் ஆற்றவுள்ளனர். (ற)

# மேற்குலகின் பிடியில் சிங்கள அரசாங்கம்!

## கா.வே.பாலகுமாரன்



(கொழும்பு)

மாமனிதர் ஜோசப்பரராஜசிங்கம் படுகொலை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணம், தமிழகத்திலே ஏற்பட்டுள்ள எழுச்சி ஆகியன குறித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் தமது கருத்துகளை பகிர்ந்துகொண்டுள்ளார்.

புலிகளின் குரல் வானொலியில் நேற்று முன்தினம் ஒலிபரப்பாகிய அரசியல் அரங்கம் நிகழ்ச்சியில் இது தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் முழுமையாக இங்கே தரப்படுகிறது.

வேகம் எடுக்கும் எங்கள் விடுதலைப் போராட்டத்துக்கு தடை போடும் பணிகளும் மிக வேகமாக முன்னெடுக்கப்படும் காலத்திலே நாங்கள் வாழ்கிறோம்.

இரண்டுக்கும் இடைப்பட்ட அந்த இடைவெளியும் முரணும் தடைகளுமே எங்கள் போராட்டத்தின் வெறியைத் தூண்டும் படிகளாக மாறுகிற அற்புத பரிணாம மாற்றத்தையும் பார்க்கலாம்.

இம்முறை இரண்டு முக்கிய பதிவுகளைத் தொட்டுச்செல்கிறோம்.மறைந்த மாமனிதர் ஜோசப்பரராஜசிங்கம், விடுதலை வேள்வியில் தன்னை ஒப்புக்கொடுத்த கடைசி மனிதராக திகழ்ந்துகொண்டிருக்கிறார்.

அவர் பற்றிய வரலாறை பின்னொரு நாள் வரலாறு பேசும். அவரது இறப்பு, இழப்பு என்பது தொடர்பான சில கருத்துகளை ஆலயங்களிலே பரிசுத்தமான இடங்களில் கொல்லப்பட்டவர்களினூடாக நாம் சொல்ல நினைக்கிறோம்.

மாமனிதர் ஜோசப் இன்னும் விழி திறக்காதவர்களுக்காக தன் கண்களை மூடி இருக்கிறார்.

தென் தமிழீழத்திலே தொடராக நடந்து வரும் படுகொலைகளை நாங்கள் பார்க்கிறோம். அந்தப் பெரியவர்கள் நடேசன்,சிவராம், சந்திரநேரு உட்பட தென் தமிழீழத்தின் மூத்தவர்கள், அறிஞர்கள் எனப் பலரைக் பார்க்கிறோம்.

நாளாந்தம் மஹிந்தவினுடைய சுயரூபம் வெளிப்படும் வேகத்தைப் பார்க்கிற போது மிகுந்த அதிர்ச்சியாக இருக்கிறது. மஹிந்த இப்போது கிட்டத்தட்ட கொலைகளைப் புரியக் கூடிய சர்வாதிகாரியாக செயற்படுவதை பாாக்கும் போது எங்களுக்குப பெரும் அச்சம் எழுகிறது .

எங்கள் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலைக்கு அனுமதித்து அல்லது உத்தரவிட்டு அல்லது தெரிந்தும் பேசாமல் இருந்துவிட்டு குருதிக்கறை படிந்த கரத்தோடு மஹிந்த இந்தியா சென்றிருக்கிறார்.

ஆகவே அவரது குருதிக்கறை படிந்த கரத்தைக் குலுக்கும் போதாவது இந்தியத் தலைவர்கள் நிச்சயமாக ஒரு கணம் அதிர்ச்சியுற்றிருப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். உலகம் இந்த செய்தியைப் புரிந்துகொள்ளும்.

எங்களுக்கு சில விடயங்கள் தெளிவாக தெரிகிறது. மஹிந்த இந்தியா சென்று எல்லோரையும் பார்த்தார். சோனியா காந்தியையும் பார்த்தார்.

அங்கேயும் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அடுத்தவருடம் ராஜீவ் காந்தி நினைவு நாளை என்னுடைய நாட்டிலிலே கொண்டாடப்போகிறேன் என்று ஏறுக்கு மாறாக, வாய்க்கு வந்தபடியெல்லாம் ஒரு கத்துக்குட்டி அரசியல் வாதியைப் போல் சொல்லிக் கொண்டு திரிவதைப் பார்க்கும் போதெல்லாம் உண்மையிலேயே சோனியா காந்திக்கு சிரிப்பு வந்திருக்கக்கூடும்.

மஹிந்தவினுடைய நிலைப்பாடுடைய முடிவு என்னவென்றால் தமிழ் நாட்டுக்குப் போக முடியாமல் கடைசியாக கொச்சிக்குப் போய் குருவாயவூரப்பன் என்று சொல்லக் கூடிய ஒரு கடவுளை வணங்கப்போகிறாராம்.

இலங்கையிலேயே யாராவது ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு வந்தவுடனே உடனடியாக செய்யவேண்டியது 2 காவடி எடுப்பார்கள். ஒனறு தலதா மாளிக்கைக்கு. மற்றொன்று புதுடில்லி. இது எங்களுக்கு விளங்கவில்லை. புதுடிலலியிலேயே என்ன கோவில் கட்டி வைத்திருக்கிறார்களா? அங்கே என்ன குளித்து அபிஷேகம் செய்யப்போகிறார்களா? அல்லது நிவேதனம் படைக்கப்போகிறார்களா? அல்லது அங்கே வரம் அள்ளப்போகிறாரா?

எங்கள்க்கு உண்மையிலே விளங்கவில்லை. இந்தியாவிலுள்ள பத்திரிகைகளே இது பற்றிக கேலியாக எழுதக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவின் சார்பாக அதன வெளிவிவகாரப் பேச்சாளர் சியாம் சரண் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறிய கருத்துகள் சிலவற்றை தொகுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன்.

அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டிலே மூன்று முக்கிய கேள்விகள் அவரை நோக்கி எழுப்பப்பட்டன.

1. ஸ்ரீலங்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய கருத்து என்ன?

2. நீங்கள் 5ஆவது இணைத்தலைமை நாடாக ஒப்புக்கொள்ள தயாராகிவிட்டீர்களா?

3. ஸ்ரீலங்காவுக்கும் புலிகளுக்குமான பேச்சுவார்த்தைகள் தொடர்பான உங்கள் நிலைப்பாடு என்ற கேள்விகள் கேட்கப்பட்ட போது.

சியாம் சரண் சொன்ன மறுமொழி ஒன்றே ஒன்று. "நாங்கள் இது பற்றி ஏற்கனவே தெளிவாகச் சொல்லி இருக்கிறோம். இலங்கை சிங்கள அரசு, புலிகளோடு பேசவேண்டும் என்பது தான் எங்களது நிலைப்பாடு" அந்த மூன்று கேள்விகளையும் புறந்தள்ளியிருப்பதனுடைய பரிமாணத்தை நீங்கள் எல்லோரும் புரிந்து கொள்ள முடியும்.

இந்திய அரசினுடைய நிலைப்பாடு பற்றி நாங்கள் ஏற்கனவே மிகத் தெளிவாகச் சொல்லியிருககிறோம். இப்போது உண்மையிலே ஸ்ரீலங்கா அரசுடன் அவர்கள் பொருணமியக் கூட்டுறவு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சில ஏற்பாடுகளை செய்வதாக அறிநதோம். அது பற்றி நாங்கள் ஒன்றும் பெரிதாக அலட்டிக் கொள்ளப்போவதில்லை.

"ரணிலுடைய காலத்திலே அமைதி முயற்சிக்கு எதிரான சக்திகளோடு இந்தியா தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டது குறிபபாக ஜே.வி.பியோடு" என்று செய்தி வந்திருக்கிறது. இது பற்றி நாங்கள் ஏற்கனவே பேசியிருக்கிறோம்.

இன்று பாருங்கள்.... இத்தகைய வெளிப்பாடுகள் எல்லாம் இந்திய மக்கள் முன்னாள் வெளிப்படையாக வைக்கப்படுகின்றன. உணமையிலே இந்தியாவுக்கு ஒருவிதமான மனநிலை இருக்கிறது. அது பெரியண்ணன் மனநிலை என்று சொல்வார்கள். தன்னைச் சூழ உள்ளவர்கள் தன்னைக் காணவந்து மதித்துப் போனால் அது அவர்களுக்கு ஒரு திருப்தி. அது போல இந்தியாவுக்கும் ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. என்பது பத்திரிகைகள் ஊடாக வெளிப்பட்டிருக்கிறது.

இந்தியா,இணைத்தலைமையாக பதவி ஏற்றாலும் பாதுகாப்பு ஒப்பந்தத்தைச் செய்தாலும் அல்லது வேறு எந்த வகையான உதவியையும் இலங்கைக்குச் செய்ய முற்பட்டாலும் இந்த முடிவுகளை மேற்கொள்ளும் முன்னால் மஹிந்தவுக்கு ஒன்றை தெளிவாகச் சொல்லவேண்டும்.

ஜே.வி.பி,பௌத்த பிக்குகளை அடக்கி வைத்து தெற்கே அரசியல்வாதிகளுக்கு உண்மையைச் சொல்லி இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒற்றையாட்சி முறை உதவாது; இணைப்பாட்சி முறையிலே தீர்கக முடியும் அதைப்பற்றி சிந்திக்கவேண்டும் என்று மிகக் கடுமையாகத் தெளிவாக மஹிந்தவுக்குச் சொல்லவேண்டும்.

இந்த ஆதரவை வைத்துக்கொண்டு தமிழீழத்திற்கு இந்தியா ஆதரவு என்று சொல்லிக்கொள்ள முன் வராவிட்டாலும் கூட நியாயமான உண்மைகளை மறைக்க முடியாததாக இருக்கிறது என்பதை நாங்கள் இன்று உணரக்கூடியதாக இருக்கிறது.

மஹிந்த என்ன செய்யப்போகிறார்? சரத் பென்சேகாவின் கைப்பாவையாகி போரைத் தொடங்கப்போகிறாரா? அல்லது மேற்குலகமும இந்தியாவும் சொல்வதைப் போல் ஒஸ்லோவுக்கு போகப்போகிறாரா? என்ற கேள்வி இன்றைக்கு எழுந்திருக்கிறது.

ஒருவேளை, ஒஸ்லோ போகக்கூடிய முடிவை மஹிந்த எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஜே.வி.பியை அவர் இந்தியா கூட்டிக்கொண்டுபோக விரும்பியதே இந்தியாவினது அழுத்தத்தின் ஊடாக ஜே.வி.பிக்கு ஒரு பாடத்தை படிப்பிக்கலாம் என்பதற்காகத்தான்.

இதுவரை காலமும் போராடும் அமைப்புக்குத்தான் கூடிய அழுத்தத்தை உலகம் கொடுத்துவந்தது. எங்களை பொறுத்தவரை அப்படித்தான் கொடுத்தார்கள். இந்த அழுத்தங்கள் எங்களுக்கு பயன்படாது என்பது உங்களுக்கு நன்றாகத்தெரியும்.

இம்முறை தான் ஸ்ரீலங்காவின் வரலாற்றில்-தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் வரலாற்றில் சமமான அழுத்தம் -புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் கொடுக்கப்பட்டிருப்பதாக எழுதுகிறார்கள். இந்த சமமான அழுத்தமே ஒருவகையான புதிய பரிணாம மாற்றம் தான். புலிகளைப் பொறுத்தவரையில் அழுத்தம் கொடுப்பதற்கு என்ன இருக்கிறது? நாங்கள் யாரைத்தாங்கி இருக்கிறோம்? எங்களுக்கு எந்த அழுத்தமும் பயன்படாது. ஆனால் சிங்கள அரசைப் பொறுத்தவரையில் அதனது நாளாந்த உயிரே மேற்குலகதின் பிடியில்த்தான் சிக்கியிருக்கிறது. இந்தியாவின் பிடியில்த்தான் சிக்கியிருக்கிறது.

இன்று எங்களைப் பொறுத்தவரை ஒட்டுமொத்தமாக ஒரு அருமையான சூழல் தமிழ் மக்களீ சிந்திய குருதி காரணமாக, மாமனிதர் ஜோசப்பரரராஜ சிங்கம் ஐயா சிந்திய குருதி காரணமாக மாறிவருகிறது.

சிங்கம் ஐயா இறக்கவில்லை. எங்கள் கூடவே வாழ்கிறார் என்று கூறிக்கொண்டு வருகிறோம். அந்த வார்த்தையைத்தான் மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய ரோமோ அவர்களது வார்த்தைகளில் கூறினோம். (த)

## உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து போட்டியிட ஜே.வி.பி தீவிர ஆலோசனை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக ஜே.வி.பியினர் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

ஜே.வி.பியின் அரசியல் பீடம் எதிர்வரும் நாட்களில் கூடி இது தொடர்பில் இறுதி முடிவினை எடுக்கும் என்று ஜே.வி.பி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னைய உள்ளூராட்சித் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட ஜே.வி.பி 219 உறுப்பினர்களைப் பெற்றது. திஸ்ஸமராம பிரதேச சபையின் அதிகாரத்தைத் தன்வசமாகக் கொண்டுள்ள ஜே.வி.பி அக்குரஸ்ஸ பிரதேச சபையிலும் தங்கல்லை நகர சபையிலும் பிரதான எதிர்க்கட்சியாக உள்ளது.

இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அணியிலேயே போட்டியிடுவது தொடர்பாக தேர்தலின்போது உதவிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.ஜே.வி.பி உட்பட ஏனைய கட்சிகளுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தக் குழு எதிர்வரும் வாரங்களில் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## அ.அட்டை வழங்கும் துரித திட்டம் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அடையாள அட்டை இல்லாதிருக்கும் 10இலட்சம் பேருக்கு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான துரித திட்டம் ஒன்றை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை காண்பிக்கப்படுவது காட்டாயமாக்கப்பட்டுள்ளதனால் அடையாள அட்டைகள் இல்லாதோருக்கு அவற்றைத் துரிதமாக வழங்க வேண்டியுள்ளது என்று ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிராமசேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதால் 10இலட்சம் விண்ணப்பங்கள் தற்பொழுது பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிராம சேவை அதிகாரிகள் தங்கள் பிரிவில் உள்ள வீடுகளுக்கு நேரடியாகச் சென்று அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு இப்படிவங்களை விநியோகித்து 2 தினங்களுக்குள் மீளப் பெற்று திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளார்கள். (ற-7)

## மட்டக்களப்பில் 13அடி நீளமான லிங்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறுமூலை பிரதேசத்தில் மயில் தங்கியமலை என்ற அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்து 13 அடி நீளமான லிங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வந்தாறுமூலை பிரதான வீதியிலிருந்து 30 கிலோமீற்றர் தூரத்திலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்தே இந்த லிங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வந்தாமூலை ஸ்ரீகாளியம்மன் ஆலய பூசகரின் கனவில் தெரிந்த இந்த லிங்கம் விசேட பூசைகள் நடத்தப்பட்ட பின்னர் பூமிக்கடியில் புதையுண்ட நிலையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது வந்தாறுமூலை காளியம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்த பாரியளவிலான லிங்கத்திற்கு விசேட அபிஷேகம் நடைபெறுகிறது. இதனை பெருமளவிலான பக்தர்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.(த-9)

## ராஜீவ் நினைவு சொற்பொழிவுக்கு சோனியாவுக்கு மஹிந்த அழைப்பு

(புதுடில்லி)

கொழும்பில் முதன முறையாக நடைபெறவுள்ள ராஜீவ் காந்தி நினைவு சொற்பொழிவில் கலந்துகொள்ளுமாறு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

நான்கு நாள் பயணமாக புதுடில்லி சென்ற போது, குடியரசுத் தலைவர் மாளிகையில் தன்னைச் சந்தித்த சோனியா காந்தியிடம் இந்த அழைப்பை மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே மிக நெருக்கமான நட்புறவு நிலவும் சூழ்நிலையில், சோனியா காந்திக்கு இலங்கை அழைப்பு விடுத்துள்ளது.

இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது, இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் நடந்த மோதலில் உயிர் இழந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய அமைதிப் படையினருக்காக நினைவு மண்டபம் கட்டும் பணியை இலங்கை விரைவுபடுத்த உள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். (ற)

# இன்று ஒரு தகவல்

## உணவும் பயமும்

ஒரு ஊரில் ஒரு மன்னன் இருந்தான். கொடுங்கோல் மன்னன். நிறையத் தொந்தரவு செய்துகொண்டிருந்தான். மக்களுக்கு அவன் ஒருமுறை என்ன செய்தான் தெரியுமா? ஒரு தவறும் செய்யாத ஒரு இளைஞனைப் பிடித்து ஜெயிலில் அடைத்துவிட்டான். அவனது உறவினர்கள் ராஜாவிடம் சென்றார்கள். "அவன் ஒரு தவறும் செய்யவில்லை... அவனை விடுதலை செய்யுங்கள்" என்று கெஞ்சினார்கள்.

மன்னன் யோசித்தான். அந்த இளைஞனை அழைத்து வரச் சொன்னான். அவனைக் கொண்டுவந்து ராஜா முன் நிறுத் தினார்கள். "இதோ பார் உன்னை நான் விடுதலை செய் வேன். ஆனால் ஒரு நிபந்தனை அதை நீ நிறைவேற்றினால் உனக்கு விடுதலை"என்றான் மன்னன். 'சரி' என்று இவனும் ஒத்துக் கொண்டான். மன்னன் நிபந்தனை என்ன என்பதைச் சொன் னான். "உன்னிடம் ஒரு செம்மறி ஆட்டைக் கொடுக்கப் போகி றேன் ஒரு மாதத்திற்கு அதற்குத் தேவையான தீனியையும் கொடுக்கப் போகிறேன். ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை எடை போட்டுப் பார்ப்பேன். அந்த ஆட்டின் எடை கொஞ்சம் கூட அதிகரித்திருக்கக்கூடாது. எடைகூடியிருந்தால் உனக்கு விடுதலை கிடையாது! என்ன சொல்கிறாய்?" என்றான்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை பயந்து போனான். குழம்பிக் கொண்டு நின்றுகொண்டிருந்தான். "சரி! ஒருநாள் தருகிறேன். நன்குயோசித்து நாளைக்கு உனது முடிவைக் கூறு"என்றான் மன்னன். இவன் கவலையுடன் வெளியே வந்தான். அங்கே ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் விடயத்தைக் கூறினான். அந்தப் பெரியவர் இவனுக்குக் காதோடு காதாக ஒருவழி சொல்லிக் கொடுத் தார். அதைக் கேட்டதும் இவன் மறுபடியும் மன்னன் முன் பாகப் போய் நின்றான். "உங்கள் நிபந்தனையை ஏற்றுக் கொள்கிறேன்" என்றான்.

மன்னன் ஒரு ஆட்டுக்குட்டியையும் ஒரு மாதத்திற்கு அதற்குத் தேவையான உணவையும் கொடுக்கும்படி உத்தர விட்டான். ஒரு மாதம் தினமும் தவறாமல் அந்த தீவனத்தை ஆட்டுக்குப் போட்டான். ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை அரண்மனைக்குக் கொண்டு போனான். மன்னன் 'அதை நிறுத்திப் பார்த்தான். எடை அதிகரிக்காமல் அப்படியேதான் இருந்தது. உடனே நிபந்தனைப்படி அந்த இளைஞனை விடுதலை செய்துவிட்டான்.

சரி... ஆட்டுக்கு எடை கூடாமல் இருப்பதற்கு அந்தப் பெரி யவர் சொல்லிக் கொடுத்த யோசனை என்ன? அது வேறொன்று மில்லை. அந்த ஆட்டுக்கு எதிரில் அதன் கண்ணில் படுவது போல் ஒரு ஓநாயைக் கட்டிப் போடச் சொல்லிவிட்டார். அவ்வளவுதான். ஆட்டுக்கு ஓநாய் பிறவிப்பகை. ஓநாயைப் பார்த்தால் ஆடு நடுங்க ஆரம்பித்துவிடும்.அவ்வளவு பயம். தினமும் அந்த ஆடு பயந்துகொண்டே சாப்பிட்டது. எடை அதிகரிக்கவில்லை அது தான் ரகசியம்.

இது சிறுவர்களுக்கான ஒரு கதை.இதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால் நாமெல்லாம் சாப்பிடும்போது மனமும் உடலும் அமைதியாக இருக்க வேண்டும். அப்போது தான் அது உடலில் சேரும். அவசரத் திலும் பயத்திலும் சாப்பிட்டால் சரியாக ஜீரணமாகாது.

இன்னொரு ராஜா இருந்தார். அவரும் ஒரு இளைஞனை ஜெயிலில் அடைத்துவிட்டார். "விடுதலை செய்யவேண்டு மென்றால் ஒரு நிபந்தனை" என்றார். 'என்ன?' என்று கேட் டான். "ஒரு ஆட்டுக்குக்குட்டியை உன் முன்பு கொண்டுவந்து நிறுத்துவேன் நீ அதனிடம் ஒரு கேள்வி கேட்கவேண்டும். அது சரியான பதில் கூறிவிட்டால் நீ விடுதலையாவாய்" என்றார்.

இளைஞன் யோசித்தான். 'சரி' என்று ஒத்துக்கொண்டான். அதன்பிரகாரம் ஆட்டுக்குட்டியைப் பதில் சொல்ல வைத்து விட்டான். என்ன நடந்தது தெரியுமா? ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இவன் மெதுவாக அதனிடம் போனான். அதன் காதில் ஏப்ரலுக்கு அடுத்து என்ன மாதம்?" என்று கேட்டான். அது உடனே 'மே' என்று கத்தியது. இவன் விடுதலை ஆகிவிட்டான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## 1000 ஊர்காவல் படை வீரர்களை புதிதாக இணைக்க அரசு தீர்மானம்

(திருகோணமலை)

திருகோணமலையில் 1000 ஊர்காவல் படையினரை புதிதாக இணைத்துக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே இந்தப் புதிய ஊர்காவல்படையினர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக ஊர்காவல் படைத் தலைமையகத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அத்தியட்சகர் நளின் லங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

புதிதாக இணைத்துக்கொள்ளப்படுவோருடன் ஊர்காவல் படையில் இருந்து விலகியவர்களையும் பெண்களையும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவர்களுக்கு இரண்டுவார கால இராணுவப்பயிற்சி வழங்கப்படவுள்ள துடன், மாதாந்தம் 10,000 ரூபா சம்பளமாக வழங்கப்படவுள்ளது. அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டேபாய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோர் திருகோணமலை பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்பே ஊர்காவல்படைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின் றது. (ற-8)

## அமைதி முயற்சிக்கான கதவுகளை ஜனாதிபதி மஹிந்த மூடிவிட்டார்

### —சுரேஷ் எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஒற்றையாட்சியின் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று இந்தியாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதன் மூலம் அமைதி முயற்சிகளுக்கான கதவுகளை அவர் மூடிவிட்டார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

இது தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிக்கை கடும் கண்டனத்திற்குரியது. தென்னிலங்கை அரசியல் வாதிகளை மகிழ்ச்சிப்படுத்தத்தான அந்த அறிக்கை உதவுமே தவிர அமைதி முயற்சிகளை முன்னெடுக்காது.

அமைதி முயற்சிகளுக்கான கதவுகளை மஹிந்த ராஜபக்ஷ மூடிவிட்டதாக நாம் அச்சப்படுகிறோம். கண்டிப் பாக ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில்,மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவை இந்த முயற்சியில் ஈடுபட வைப்பதாகத் தொடர்ந்து கூறிவரு வது ஆச்சரியமளிக்கின்றது.

இணைத்தலைமை நாடுகளும் இதையே கூறிவந்த போதும் யாருடைய பேச்சையும் கேட்காமல் இருப்பதில் மஹிந்த ராஜபக்ஷ உறுதியாகவுள்ளார். அமைதி முயற் சிகள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத் தால் அதைத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு ஏற்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பயணத்துக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் சந்திப் பை நடத்த மஹிந்த ராஜ பக்ஷ திட்டமிடப்பட்டுள் ள தாக அமைச்சர் டியூ குண சேகர தெரிவித்துள்ளார்.

ஜோசப் பரராஜ சிங் கத்தின் படுகொலையைத் தொடர்ந்து, நாடாளுமன்ற சிறுபான்மை தமிழ் உறுப் பினர்களின் பாதுகாப்புக் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடத்த மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளதாகவும் குண சேகர கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மஹிந்த ராஜபக்ஷ பேசவேண்டியது எதுவுமில்லை. முதலில் விடுதலைப் புலிகளுடன் பேசி பிரச்சினைக் குத் தீர்வுகாண அவர் முன்வரவேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசி எந்தவொரு முடிவையும் மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ள முடியாது. விடுதலைப் புலிகளுடன் தான் அவர் பேச வேண்டும். ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் கீழ் சாதாரண ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பைக் கூட செயற் படுத்த முடியாது என்பது மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும். அப்படியான நிலையில் இனப்பிரச்சி னைக்கு அவர் எப்படித் தீர்வுகாண்பார்? என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.(ற)

## உலகமே குலுங்கப் போகிறது!

## இன்று பயங்கர பூகம்பம் ஏற்படுமென எச்சரிக்கை

(சென்னை)

இன்று பயங்கர பூகம்பம் ஏற்படும் என்றும் இதனால் உலகமே குலுங்கப் போகிறது என்று சென்னை பல் கலைக்கழகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை பல்கலைக்கழகத்தில் பூமி அமைப்பியல் ஆய்வுத்துறை என்று ஒரு தனித்துறை உள்ளது. இந்த துறை சார்பில் பூமியின் மண் மற்றும் பாறை அமைப்பு தொடர்பாக அடிக்கடி ஆய்வுகள் நடத்தப்பட்டு வரு கின்றன.

பூமிக்கு அடியில் உள்ள பாறைகளில் உண்டாகி இருக்கும் மாற்றம் காரணமாக இன்று திங்கட்கிழமை பெரிய பூகம்பம் ஏற்படும் என்று இந்த ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. இது தொடர்பாக சென்னை பல்க லைக்கழக பேராசிரியர் என்.வெங்கடநாதன் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பூமிக்கு அடியில் உள்ள பிளேட்கள் வேகமாக நகர்ந்து வருகின்றன. இதனால் உலகம் முழுவதும் மீண்டும் ஒரு பெரிய பூகம்பம் ஏற்படவாய்ப்பு உள்ளது.ஜனவரி 2ஆம் திகதி இந்தப் பூகம்பம் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பூகம்பத்தின் தாக்கம் ரிக்டர் அளவுபடி 7.0 வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது அதிகப்படியான தாக்குதலாக இருக்கும் என்பதால் உலகின் பல பகுதிகளில் பூகம் பத்தின் விளைவை உணரமுடியும்.

சுமத்ரா தீவின் தென்மேற்கு பகுதியை மையமாகக் கொண்டு இந்தப் பூகம்பம் உருவாகலாம். இந்தப் பூகம்பம் நிகழ 80 சதவீதம் வாய்ப்பு உள்ளது. இதன் தாக்கம் இந்தியாவில் அருணாச்ல பிரதேசம், இமாச்சல பிரதேசம் என்பவற்றில் அதிகமாக இருக்கும்.

பூடான் ,ஜப்பானில் உள்ள ரிக்கிக் தீவுகள், நியூசினியாவில் உள்ள நியூபிரிட்டன், அமெரிக் காவில் சான்பிரான்சிஸ்கோ ஆகிய பகுதிகள் பூகம் பத்தால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. இந்தப் பகுதி களில் பூகம்பத்தின் தாக்கம் 5 முதல் 6 ரிக்டர் ஸகேல் வரை இருக்கலாம் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஐ. தே. கவுடன் இணைந்து செயற்பட மஹிந்தவுக்கு இந்தியா அறிவுறுத்து

(கொழும்பு)

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு காணுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அறிவுறுத்தியுள் ளதாகத் தெரியவருகிறது.

புதுடில்லியில் மன்மோகன் சிங்குடனான சந்திப்பின் போது, இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை, ஐக்கியத்தைப் பாதுகாக்க ஒற்றையாட்சியின் கீழ் அதிக பட்ச அதிகாரம் வழங்க தான் திட்டமிட்டுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ விவரித்துள்ளார்.

இதைக் கேட்டுக்கொண்ட இந்தியப் பிரதமர், பிரதேச ஒற்றுஶ்ம, ஐக்கியம் ஆகியவற்றை ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டின் கீழ் செயற்படுத்தும் போதே தாம் ஆதரிப்போம் என்றும் கூறியுள்ளார்.

இருந்தபோதும் இலங்கை அமைதி முயற்சிகளிலோ, இணைத் தலைமை நாடுகளில் ஒன்றாகவோ இந்தியா நேரடியாகப் பங்கேற்க இயலாத நிலையில் இருப்ப தாகவும் மஹிந்தவிடம் மன்மோகன் சிங் விளக்கியுள்ளார்.

மேலும்,தமது அரசாங்கத்தினால் தென்னிந்தி யக் கூட்டணிக் கட்சிகள் இடம்பெற்றிருப்பதால் நேரடி யாக தலையிடவோ இராணுவ உதவிகளை வழங் கவோ பரிசீலிப்பதும் கடினமானது என்றும் மன்மோ கன சிங் கையை விரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக மன்மோ கன்சிங்கைச் சந்தித்த ரணில் விக்கிரமசிங்க , தாம் தோந்தெடுக்கப்பட்டால் தென்னிலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கட்சிகளை ஐக்கிய இலங் கைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒஸ்லோ பிரகட னத்தின் அடிப்படையில் அமைதி முயற்சிகளுக்குத் தீர்வுகாண இணங்க வைப்பதாகக் கூறியிருந்தார். ரணிலின் இந்தக் கருத்தை மன்மோகன் சிங் அப்போது ஏற்றிருந்தார்.

மஹிந்தவின் தற்போதைய இந்தியப் பயணத் தின் போது இதைச் சுட்டிக்காட்டிய மன்மோகன் சிங் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வலி யுறுத்துவதாகத் தெரியவருகிறது. (ற)





வட-கிழக்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்து கொழும்பு இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் இராணுவ வீரர்களை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடந்த வெள் ளிக்கிழமை மாலை சென்று பார்வையிட்டார். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராய்ச்சி ஆகியோரும் பிரதமருடன் சென்று காயமடைந்த இராணுவ வீரர்களை பார்வையிட்டனர். இதன்போது அவ் வீரர்க ளுக்கு பிரதமர் அன்பளிப்புப் பொருட்களையும் வழங்கினார்.

# சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள அனைவரும் ஒன்றிணைக! - ஜனாதிபதி

(கொழும்பு)

ஒரே தேசத்தவர் என்ற வகையில் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் எம்மை ஊக்குவிக்கும் ஓர் ஆண்டாக 2006ஆம் ஆண்டு அமைய வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணத்தை யதார்த்த பூர்வமாக்குவதற்காக தனது தலைமையுடன் இணைந்து செயற் படுவதற்கு அனைவரும் முன்வர வேண்டுமெனவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு உதயமாகியுள்ள இவ்வேளையில், இலங்கை வாழ் அனைத்து மக்களும், அனைத்து உலக மக்களுக்கும் இப் புத்தாண்டு வெற்றிகரமான ஆண்டாக அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் அவர் தனது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல தசாப்த காலமாக தீர்வு காணப்படாதிருந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் சவால்களுடனேயே நாம் புத்தாண்டை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி அந்தச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு நாட்டை சுபீட்சமான



பாதையில் இட்டுச்செல்ல அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் கேட்டுள்ளார். (ற-9)

# சமாதானச் சூழல் உருவாக பிரார்த்திக்கிறேன் - சந்திரிகா

(கொழும்பு)

தற்போது வடக்கு-கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் கூடுதலாக நடைபெற்று வருகின்றன.

புதுவருடத்தில் பயங்கரவாதிகளின் உள்ளங்களில் பகைமை அணைந்து நல்லெண்ணம் ஏற்படுவதன் மூலம் அனைவரும் சமாதானமாகவும் ஒத்துழைப்புடனும் வாழ்வதற்கு பொருத்தமான சூழல் தோன்றட்டுமென பிரார்த்திப்பதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது புருவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கடந்த புதுவருடத்தின்போது ஆழிப்பேரலை தமக்கு உண்டு பண்ணிய அவலங்களுக்கும், அழுகுரல்களுக்கும் மத்தியிலே நாம் புதுவருடத்தைக் கொண்டாடினோம்.

இந்த வருடத்தில் அந்தத் துயரங்களைக் கடந்து அனைவரும் ஒன்றாக எழுந்து நிற்பதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அனர்த்தத்தின் பின்



நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் எஞ்சியுள்ள எதிர்பார்ப்புக்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள 2006ஆம் ஆண்டில் நாம் காலடி எடுத்துவைத்துள்ளோம் எனவும் முன்னாள் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ற-9)

## புதிய பட்ஜெட்டின் பிரகாரம்

# அரச ஊழியர்களுக்கான அதிகரித்த சம்பளம் இம்மாதம் முதல் வழங்கப்படும்

புதிய வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கான அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு இம்மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை வெகுவிரைவில் சகல அரசாங்க அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவையில் புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகள் உட்பட சுமார் ஒரு இலட்சம் உத்தியோகத்தர்கள் புதிய சம்பள அதிகரிப்பின் மூலம் நன்மையடையவுள்ளனர்.

வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கான அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவையும் இம் மாதம் தொடக்கம் வழங்குவதற்கு பொதுநிர்வாக அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன்மூலம் ஓய்வூதியம் பெறும் சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் பேர் நன்மையடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பாக திறைசேரி அதிகாரிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# மோசடி ஊழல்களில் பொலிஸார்; அஸ்கிரிய பீடாதிபதி கவலை

(கொழும்பு)

பொலிஸார் பெருமளவு ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என்று அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரகித்ர தேரர் கூறியுள்ளார்.

பொலிஸ் ஆய்வாளர்கள் சங்கத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடாதிபதிகளைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது அஸ்கிரிய பீடாதிபதி மேலும் குறிப்பிடுகையில்,

பொலிஸ் சேவை மிகுந்த ஒழுக்கத்துடன் செய்ய வேண்டிய முக்கிய சேவையாகும். பொலிஸ் அதிகாரிகள் ஏனைய மக்களைப் போல சுதந்திரமாகத் தீர்மானங்களை எடுக்கமுடியாது.

பொறுப்புடன் ஒழுக்கமாகச் செயற்பட வேண்டும். சில பொலிஸார் குற்றவாளிகளுக்கு உதவுகின்றனர். இது அவர்கள் தங்களுக்கு மட்டுமன்றி தங்கள் திணைக்களத்திற்கும் செய்யும் தவறாகும். போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உதவி பல பொலிஸார் சிறைக்குச் சென்றுள்ளனர். இந்த நிலையிலிருந்து பொலிஸ் திணைக்களத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.(ற)

# சுதந்திர சமாதானத்தை உருவாக்க முழு மூச்சுடன் செயற்படுவோம் - ரணில்

எமது தாய்த்திருநாட்டில் பயம் சந்தேகமின்றி சுதந்திரமாக வாழக்கூடிய சமாதான சூழல் ஒன்று உருவாக முழுமூச்சாய் செயற்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர்



ரணில் விக்கிரமசிங்க தமது புதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விருப்பங்களோடும் பெரும் தொகையானோரின் எதிர்பார்ப்புக்களோடும் உள்ள சமாதானத்தைக் காணவேண்டும் என்பதே எமது இலட்சியமென்றும் மலர்ந்துள்ள இந்தப் புதுவருடத்தில் அனைவரது விருப்பங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவேற வேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்திப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் தனது வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நாம் இந்த நாட்டுப் பிரஜைகள் என்ற ரீதியில் சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்குச் செய்யவேண்டிய அனைத்து விடயங்களையும் குறைவின்றிச் செய்வதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூணவேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-9)

## திருவெம்பாவை உற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 4.30மணிக்கு திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து சுவாமி வீதியுலாவும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் இடம்பெறும். எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் திருவாசக முற்றோதலும் அன்னதானமும் இடம்பெறும். எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணி தொடக்கம் தினமும் மாலை வேளையில் திருமுறைப்படிப்பு இடம்பெறும். (ற-9)

# தமிழகத்தின் அரவணைப்பு நம்பிக்கை தருகிறது!

## கிளிநொச்சி மக்கள் அமைப்புகளின் ஒன்றியம் இந்தியத் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சென்னையில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்புகளின் ஒன்றியம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், கி.வீரமணி, தொல்.திருமாவளவன், இராமதாஸ் ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவில் வாழ்ந்து பல இலட்சம் தமிழ்பேசும் மக்களுக்காக அவர் தம் உரிமைக்காக எங்களுடைய தாய்நிலமாகிய தமிழகத்திலிருந்து எழுந்த அன்புக் குரல்கள் எம்மை அகம் மகிழச் செய்துள்ளது. எங்களுடைய எதிர்பார்ப்புக்களையும் நம்பிக்கைகளையும் வலுவாக்கியுள்ளது. உறவும் உணர்வும் பிணைந்து எங்கள் உரிமைக்காக, பாதுகாப்பிற்காக தாங்கள் 30.12.2005அன்று தமிழகத்தில் நடாத்திய ஈழத்தமிழர் பாதுகாப்பு மகாநாட்டின் தீர்மானங்களை வரவேற்கின்றோம்.

சிங்கள வன்போக்குத் தனமான ஆட்சியாளர்களினால் கடும் ஒடுக்குமுறைக் கோட்பாடுகளும் வன்முறைச் செயல் வடிவங்களும் தாயகத்தில் தொடர்ந்தவண்ணம் உள்ளன. நாள்தோறும் தமிழர் மீதான படுகொலைகளும், கொலை வெறித்தனங்களும் அதிகரித்துள்ளன. ஆட்கடத்தல்கள், காணாமல் போதல், பாலியல் வல்லுறவுகள், தேடுதல்கள், சுற்றிவளைப்புக்கள், கைதுகள், அச்சுறுத்தல்கள், பொருளாதார தடைவிதிப்புகள், குடிபெயர்வுகள் என்பன மலிந்துவிட்டன. இத்தகைய சம்பவங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள சமகாலத்தில் தீவிரம் பெற்றுள்ளது என்பது புரிந்துகொள்ளப்படவேண்டிய ஒன்றாகும்.

இத்தகைய வேதனை மிகுந்த அவல வாழ்வுச் சூழலை தமிழர் வாழ்விடங்களில் ஏற்படுத்திவிட்டு ஜனாதிபதியும் அவரது கடும் கோட்பாட்டு சகாக்களும் தமிழர்களின் உரிமை தொடர்பில் சர்வதேச சமூகத்தை தவறான அரசியல் அணுகுமுறையை கையாளச் செய்வதற்கு பகீரத முயற்சி எடுத்து வருகின்றனர். குறிப்பாக மேற்குலகைப் புறந்தள்ளி இந்திய தேசத்தை வலிந்திழுத்து இலங்கைத் தீவின் இனச் சிக்கலுக்குள பிணைத்து விடுகின்ற கபடத்தனமும் சதிகாரத் தன்மையும் மிக்க அரசியல் வலைக்குள் இந்தியாவை வீழ்த்த சிங்கள அரசு முயற்சித்து வருகின்றது.

தொப்புழ் கொடியுறவாக உள்ள தாய்த் தமிழகத்தினுடையதும் தமிழீழத்தினுடையதும் உறவறுத்து பகையரசியல் சூழ்நிலையை ஏற்படுத்த சிங்கள வன்தீவிர ஆட்சியாளர்கள் முயற்சிப்பதை தாங்களும் தமிழக மக்களும் நன்கு உணர்ந்துள்ளமை எம்மை ஆறுதலடையச் செய்கின்றது.

இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றுச் சூழ்நிலைகளின் பிரகாரம் தமிழ் பேசும் மக்களாகிய நாம் சிங்கள அரசுத் தலைமைகளுடன் இணைந்து வாழ முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்கின்ற செய்தி தெளிவானது.

ஆகவே, தமிழீழம் என்கின்ற உயரிய அரசியல் சிந்தாந்தத்தை அடைவதற்காக ஈழத் தமிழ் மக்கள் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் பணிகளுக்கும் தாய்த் தமிழகத்தினுடைய தார்மீக ஆதரவு எங்களுடையதாக வேண்டும் என்பது எமது மக்களின் உறவு கலந்த எதிர்பார்ப்பாகும். இதற்காக குரல்தரும் தங்களுடைய பணிக்கு எங்களுடைய பாராட்டுக்கள். தங்களினதும் தமிழக சகோதரர்களினதும் காத்திரமான பங்களிப்பு தொடர்ந்து எமது இன விடுதலைக்கு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (த)

# விவசாயிகள் சங்கடம்

(மந்துவில்)

வடமராட்சி-கொடிகாமம் பிரதான வீதியிலுள்ள முள்ளிப்பாலத்தின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலமாகியும் முடியாத நிலையில் இருப்பதால் மழை வெள்ளம் வழிந்து ஓட முடியாத நிலையில் வெள்ளம் வயல் நிலங்களில் பாய்வதால் பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக முள்ளி, வரணிப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப் பாலத்தின் திருத்தவேலைகள் எப்போது முடியுமோ எனச் சந்தேகம் தெரிவிக்கும் விவசாயிகள், மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பயிரழிவுக்கான நஷ்டஈட்டை யாரிடமிருந்து பெறுவது எனத் தெரியாத சங்கடமான நிலையில் இருக்கிறார்கள். (து-102)

## இடமாற்றம்

இல.15 கச்சேரி நல்லூர் வீதி எனும் முகவரியில் இயங்கிவந்த சாந்திகம் காரியாலயம் மக்கள் நலன்கருதி சேவைகளை விரிவாக்கும் முகமாக காரியாலய வேலைகள், பயிற்சிப்பட்டறைகள் அனைத்தும் கடந்த 12ஆம் திகதி முதல் இல.8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி எனும் முகவரியில் இடம்பெற்று வருகின்றன. தொடர்புகளை புதிய முகவரியில் மேற்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ற)

## சச்சிதானந்தனுக்கு ஜே.வி.பி கண்டனம்

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் எம்.சச்சிதானந்தனுக்கு ஜே.வி.பிகண்டனம் தெரிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்துக்கு சச்சிதானந்தன் இறுதி மரியாதை செலுத்த வேண்டிய இடம் மட்டக்களப்பு தான்.ஸ்ரீலங்கா நாடாளுமன்ற குழுக்களின பிரதித் தலைவராக உள்ளவர் கிளிநொச்சிக்குச் சென்று இறுதி மரியாதை செலுத்தியது சரியானது அல்ல.அவர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் ஜே.வி.பிகூறியுள்ளது. (ற)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!

அருணா பத்து வயது சிறுமி. அவள் தாய் அருணா கைக்குழந்தையாக இருக்கும் போதே இறைவனடி சேர்ந்து விட்டாள்.

அருணாவின் தந்தை அமிர்தத்தை மறுமணம் செய்து கொண்டார். அவரும் ஒரு நாள் எங்கேயோ சென்றுவிட்டார்.

அருணாவின் நிலைமையோ படுமோசமாகி விட்டது. எதற்கெடுத்தாலும் அமிர்தம் அருணாவை அடித்து உதைத்தாள். இருந்தாலும் அவளை அம்மா என்றே அழைத்தாள் அருணா.

ஒரு நாள் இரவு நேரத்தில் அமிர்தம் அருணாவை வீட்டை விட்டு விரட்டி விட்டாள். தன் தலைவிதியை எண்ணி நொந்தபடி நடந்தாள் அருணா.

வானில் பிறைநிலா தெரிந்தது. காட்டில் இருந்த ஒரு பழுதடைந்த பங்களாவில் படுத்துக்கொண்டாள் அருணா.

திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அருணா விழித்திருந்தாள். அவள் சப்தம் வந்த திசையை நோக்கி நடந்தாள்.

'என் சிறகுகள் பாரமாய் அழுத்துகின்றன. இதை யாராவது பிடுங்கி எறியக்கூடாதா?' என்று பறவை ஒன்று அலறிக் கொண்டிருந்தது.

அப்பறவைக்கு அளவுக்கு அதிகமான சிறகுகள் இருந்தன. அதனைப் பிடுங்கி அப்புறப்படுத்தினாள் அருணா. பறவைக்கு மீதி இரு சிறகுக்ள் மட்டுமே இருந்தன.

'போதும் அருணா! இச்சிறகுகளை எடுத்துச் செல் உன் துன்பம் தீரும்' பறவை தங்கப் பறவையாக மாறிப் பேசியது.

அது ஒருசக்தி வாய்ந்த பறவை என்பதை உணர்ந்து மகிழ்ச்சியுடன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றாள் அருணா.

சிறகுகளை அமிர்தத்திடம் கொடுத்தாள் அருணா. என்ன ஆச்சரியம். சிறகுகள் அனைத்தும் தங்கமாக மாறிவிட்டன.

அமிர்தம் ஆனந்தம் அடைந்தாள. அவள் அருணாவிடம் சாமர்த்தியமாகப் பேசி நடந்ததை அறிந்துகொண்டாள்.

பின்னர் அமிர்தம் காட்டு பங்களாவில் போய்த் தங்கினாள். அருணாவிற்கு நடந்ததைப் போலவே அமிர்தத்திற்கும் நடந்தது. பறவையின் மீதி இரு சிறகுகளையும் பிடுங்க விரும்பினாள் அமிர்தம்.



பறவை தங்கப் பறவையாக மாறியது. அது கோபம் கொண்டு அமிர்தத்திற்கு சாபம் கொடுத்தது.

வீட்டிற்கு வந்ததும் ஆசையுடன் சிறகுகளைப் பார்த்தாள் அமிர்தம். சிறகுகள் அனைத்தும் பாம்புகளாக மாறி அவளைத் துரத்தின.

மீண்டும் பறவையிடமே வந்து சேர்ந்தாள் அமிர்தம். அவள் உயிருக்குப் பயந்து ஓடிய நேரத்தில் தன் தவறை உணர்ந்தாள்.

'நான் திருந்தி விட்டேன். என்னை மன்னித்துவிடு தெய்வமே!' எனப் பறவையிடம் கெஞ்சினாள் அமிர்தம்.

'எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்திவாழவேண்டும்! அன்பே தெய்வம்! இனி யாரையும் துன்புறுத்தாதே! மன்னித்தேன்' என்றது தங்கப்பறவை.

பின்னர் அருணாவிடன் அன்புடன் நடந்துகொண்டாள் அமிர்தம்.

என்ன ஆச்சரியம் அவள் அப்பாவும் ஒரு சில நாட்களில் வீடு வந்துவிட்டார்.

## ரைட் சகோதரர்கள்



காற்றைவிட இலேசான வாயுக்களை நிரப்பிய மிகப் பெரிய பலூன்களின் உதவியால் நூறு ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் வானத்தில் பறந்து வந்தார்கள். ஆனால் முதன் முதலாக ஓர் எஞ்சினைப் பொருத்தி விரும்பிய திசையில் ஓட்டிச் செல்லக் கூடிய விமானத்தை அமைத்த பெருமை ரைட் சகோதரர்களைச் சேரும். அமெரிக்காவைச் சேர்ந்த இவர்களின் முழுப்பெயர்கள் வில்பர் ரைட் (Wilbur Wright, 1867–1912), ஓர்வில் ரைட் (Orville Wright, 1871–1948) என்பன.


வட கரோலினாவில் கிட்டி ஹாக் (Kitty Hawk) என்னும் கிராமமே இவர்களுடைய பரிசோதனைகளுக்கு ஏற்ற இடமாக அமைந்தது. அங்கு 1903இல் இவர்கள் ஒரு விமானத்தைச் செய்து பெட்ரோலில் இயங்கும் ஓர் எஞ்சினை அதில் பொருத்தினார்கள். முதன்முதலில் இந்த விமானம் தரையிலிருந்து சுமார் 3 மீற்றர் உயரம் கிளம்பி 12 விநாடிகளே பறந்தது. அது 26 மீற்றர் தூரம்தான் சென்றது. 1905இல் ரைட் சகோதரர்கள் வேறொரு விமானத்தை அமைத்து அதில் 39 நிமிடங்கள் பறந்தனர். இந்த விமானம் 38,000 கிலோ மீற்றர் தூரம் சென்றது.


இந்த அரிய சாதனைகளை மக்கள் முதலில் பொருட்படுத்தவில்லை. அமெரிக்க அரசாங்கமும் ஆதரவு காட்டவில்லை. 1908இல் பிரெஞ்சு நாட்டினர் இவர்களுடைய பறக்கும் எந்திரத்தைப் பாராட்டிப் பரிசளித்தனர். அதன்பின் அமெரிக்க அரசாங்கம் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்தது. 1909இல் ரைட் சகோதரர்கள் தங்கள் பெயரில் தொழிற்சாலை ஒன்றை அமைத்து ஆகாயவிமானம் தயாரிக்கத் தொடங்கிப் பெரும்புகழ் பெற்றனர்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?





## விடுகதைகள்

1.தொப்பித் தலையன் சுருக்கென்று குத்துவான் அவன் யார்?

2.தண்ணீர் இல்லாத் தடாகத்தில் தாவிப் பாயும் கப்பல் அது என்ன?

3.இருட்டுக்குள் நடமாடுபவன் குருட்டுப் பட்டம் பெற்றவன் அவன் யார்?

4.போருக்கு உதவாத ஈட்டி சமையலுக்கு உதவும் ஈட்டி அது என்ன?

5.உருவமில்லாதவன் உருண்டு புரண்டு ஓடுவதில் கெட்டிக்காரன் அவன் யார்?

6.உயரமான வீட்டுக்காரி கறுப்பு சேலைக்காரி மஞ்சள் ரவிக்கைக் காரி அவள் யார்?

7.ஊசி நுழைய முடியாத கிண்ணத்தில் ஒரு படி தண்ணீர் அது என்ன?

8.ஊசி போல் வால் உப்பினார் போல் வயிறு பாசி போல் இறக்கை கொண்டு பந்து போல் ஆட்டம் ஆடுவான் அவன் யார்?

9.பட்டுப்போல் பட்டுடுத்தி சந்தைக்கு வந்த பெண்ணே நீ தொட்டவரை அழவைப்பாய் கண்ணே அவள் யார்?

10.ஓங்கி வளர்ந்தவள் ஒரு பிள்ளை பெற்றதும் விடை பெற்றாள் அவள் யார்?

ஒழுக்கத்தால் ஏற்படும் அழகே தனி அழகு. இத்தகைய அழகு இயற்கை அழகைவிட மிகச் சிறந்தது.

மற்றவர்களை நம்பாமல் உன்னை நம்பு உன் முயற்சியை நம்பு தன்னம்பிக்கைதான் உண்மையான மகிழ்ச்சியைத் தருவது.

விடைகள்

விடுகதைகள்

1.முள் 2.ஒட்டகம் 3.ஆந்தை
4.முருங்கைக்காய் 5.ஆறு
6.பனம்பழம் 7.தேங்காய்
8.தும்பி 9.வெங்காயம்
10.வாழைமரம்

கண்டுபிடியுங்கள்

1.மூக்குக்கண்ணாடி 2.டை
3.தொப்பி 4.கைத்தடி
5.மைல் கல் 6.மரம்
7. கார்க் கதவு

சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய



**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

5 (சென்றவாரத் தொடர்ச்சி....)

(இ) நோய் மற்றும் போசாக்கின்மையைக் குறைத்தல். இது விடயத்தில் சுற்றாடல் மாசடைவதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் கருத்திற்கொண்டு, ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு என்னும் கட்டுக் கேப்புக்குள், இலகுவாகக் கிடைக்கக்கூடிய நுட்பங்களைப் பிரயோகித்தல் அத்துடன், சத்துள்ள உணவுகள், சுத்தமான குடிதண்ணீர் போன்ற இன்னோரன்ன சேவைகள் போதுமான அளவில் கிடைக்கச் செய்தல்.

(ஈ)தாய்மாருக்குப் பிரசவத்தின் முன்னரும் பிற்பாடும் முறையன சுகாதாரப் பராமரிப்புக் கிடைப்பதை உறுதிப்படுத்துதல்.

(உ)சமூகத்தின் சகல பிரிவினரும் - குறிப்பாகப் பெற்றோரும் பிள்ளைகளும் - தேவையான அறிவையும், கல்வியையும் பெறுவதை உறுதி செய்தல். அத்துடன், சிறுவர் சுகாதாரம், போசாக்கு, தாய்ப்பாலூட்டுதலின் நன்மைகள், ஆரோக்கியமும் சுற்றாடற் சுகாதாரமும், விபத்துக்களைத் தடுத்தல் போன்றன தொடர்பன அடிப்படை அறிவு சகலருக்கும் கிடைப்பதை உறுதி செய்தல்.



(ஊ)நோய்த் தடுப்புச் சுகாதாரம் பெற்றோரை வழிநடத்துதல், குடும்பத்திட்டக் கல்வி மற்றும் சேவைகள் ஆகியவற்றை விருத்தி செய்தல்.

3.பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய பாரம்பரிய நடைமுறைகளை ஒழிக்கும் பொருட்டு, பொருத்தமானதும் உறுதியானதுமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

4. அரசதரப்பினர் இந்த உறுப்புரையில் ஏற்றுக் கொண்டிருக்கும் உரிமையைக் காலக்கிரமத்தில் முழுமையாக நிலைநாட்ட ஏதுவாகச் சர்வதேச ஒத்துழைப்பை வளர்க்கவும் ஊக்குவிக்கவும் முன்வர வேண்டும். இது விடயத்தில் வளர்முக நாடுகளின் தேவைகள் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

**உறுப்புரை 25**

தகுதி வாய்ந்த அதிகாரிகளினால், தாபரிப்பு, பாதுகாப்பு அல்லது உளச் சார்பான அன்றேல் உடல் சார்பான சிகிச்சைக்கென விடப்பட்டுள்ள பிள்ளைக்குக் கிடைக்கும் சிகிச்சை மற்றும் தாபரிப்பு நிலைமைகள் ஆகியன பற்றி அவ்வப்போது ஆராயப்படவேண்டும் என்னும் உரிமையை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**உறுப்புரை 26**

1. ஒவ்வொரு பிள்ளையும் சமூகக் காப்புறுதி அடங்கலான சமூகப் பாதுகாப்பின் நலனைப் பெறும் உரிமையுடையதென்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்வதுடன், தத்தமது தேசிய சட்டத்துக்கமைய இந்த உரிமை முழுமையாகக் கிட்டுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

2. இந்த நன்மைகள் பிள்ளையினால் அல்லது பிள்ளையின் சார்பாகக் கோரப்படும்போது, அக் கோரிக்கைகள் முறை

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

யானவை எனக் காணும் பட்சத்தில், பிள்ளையினதும் அதன் பராமரிப்புக்குப் பொறுப்பாக இருப்பவர்களினதும் வாய்ப்பு, வசதிகள் மற்றும் சூழ்நிலைகளையும் விண்ணப்பம் தொடர்பான ஏனைய விடயங்களையும் கவனத்திற் கொண்டு, வழங்கப்படல் வேண்டும்.

**உறுப்புரை 27**

1.ஒவ்வொரு பிள்ளையும் அதன் உடல், உள, ஆன்மீக, ஒழுக்க, சமூக மேம்பாட்டுக்கு ஏற்றவாறான வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்கும் உரிமையுடையதென்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2.பிள்ளையின் மேம்பாட்டுக்கு அவசியமான் சூழ்நிலைகளை ஏற்படுத்தும் பிரதான கடப்பாடு பெற்றோர் அல்லது பிள்ளைக்குப்பொறுப்பாயிருக்கும் ஏனையோரின் சக்திக்கும் பணபலத்துக்கும் ஏற்றவாறு நிறைவேற்றப்படல் வேண்டும்.

3.தேசிய நிலைமைகளுக்கும், தம் நாட்டின் சக்திக்கும் ஏற்றவாறு பெற்றோரும், பிள்ளைக்குப் பொறுப்பாயிருக்கும் ஏனையோரும் இந்த உரிமையை அனுபவிப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும், அரசதரப்பினர்மேற்கொள்வதுடன் தேவை ஏற்படும் போது, குறிப்பாகப் போசாக்கு, துணிமணி, உறைவிடம் ஆகியவற்றுக்கான பொருளுதவிகளுக்கும் ஆதரவுத் திட்டங்களுக்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

4. பிள்ளையின் தாபரிப்புச் செலவை, உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பெற்றோர் அல்லது பிள்ளையின் செலவுக்குப் பொறுப்பாகவுள்ள பிறரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் அரசதரப்பினர் எடுத்தல் வேண்டும். குறிப்பாகப் பிள்ளையின் நிதிக்குப் பொறுப்பாக இருப்பவர், பிள்ளையின் நாட்டுக்கு வெளியே வசிப்பவராக இருந்தால், சர்வதேச உடன்படிக்கைகளை நாடும் வாய்ப்பை வளர்க்க அல்லது அத்தகைய உடன்படிக்கைளை நிறைவேற்ற ஊக்குவிப்பதுடன் பொருத்தமான வேறு ஏற்பாடுகளையும் அரசதரப்பினர் செய்தல் வேண்டும்.

**உறுப்புரை 28**

1.கல்வி கற்கும் உரிமை பிள்ளைக்கு உண்டென்பதை அரசதரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உரிமையைப் படிப்படியாகவும், சமவாய்ப்பென்னும் அடிப்படையிலும் அனுபவிக்க வகை செய்யும் பொருட்டு, அரசதரப்பினர் பின்வரும் நடவடிக்கைளை விசேடமாக மேற்கொள்ள வேண்டும்:

(அ) எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் கிடைக்கச் செய்தல்.

(ஆ) பொது மற்றும் தொழில்சார் கல்வி உட்பட, வெவ்வேறு தரப்பட்ட இடைநிலைக் கல்வி முறைகளை ஊக்குவித்து ஒவ்வொரு பிள்ளைக்கும் அது கிடைக்கச் செய்வதுடன், இலவசக் கல்வி, தேவைப்படுவோருக்குக் கல்வியைத் தொடர நிதியுதவி அளித்தல் போன்ற பொருத்தமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

(இ) எல்லோருக்கும் ஆற்றலின் அடிப்படையில் பொருத்தமான வழிமுறையில் உயர் கல்வி கிடைக்கச் செய்தல்.

(ஈ) எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி மற்றும் தொழில்சார் தகவல்களும் வழிகாட்டலும் கிடைக்கச் செய்தல்.

(உ)பிள்ளைகள் பாடசாலைகளுக்குக் கிரமமாகச் செல்வதை ஊக்குவிக்கவும் படிப்பை இடையில் நிறுத்திக் கொள்வோரின் தொகையைக் குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.

2.பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாடு நடைமுறைகள் இந்தச் சமவாயத்துக்கு அமைவாகவும், பிள்ளையின் கௌரவத்துக்கு இசைவாகவும் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் அரதரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

3.அரசதரப்பினர், கல்வி தொடர்பான விடயங்களில் சர்வதேச ஒத்துழைப்பை விஸ்தரிக்கவும் ஊக்குவிக்கவும் வேண்டும். குறிப்பாக, உலகம் முழுவதிலும் அறியாமை, எழுத்தறிவின்மை என்பனவற்றை இல்லாதொழிப்பதற்கும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவு, நவீன போதனா முறைகள் முதலியன அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்கும், இந்த ஒத்துழைப்பு அவசியமாகும். இது விடயத்தில் வளர்முக நாடுகளின் தேவைகள் குறிப்பாகக் கவனிக்கப்படல் வேண்டும்.

**உறுப்புரை 29**

1.அரசதரப்பினர், பிள்ளையின் கல்வி பின்வரும் விடயங்களின்பால் நெறிப்படுத்தப்படல் வேண்டுமென உடன்படுகின்றனர்:

(அ)பிள்ளையின் ஆளுமை, திறமைகள், உள மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் முழுமையாகப் பரிணமிக்கச் செய்தல்.

(ஆ) மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனத்தில் வரையறுக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு மதிப்பளிப்பதை விருத்தி செய்தல்.

(இ)பிள்ளையின் பெற்றோரினது கலாசாரத் தனித்துவம், மொழி, ஆசாரங்கள், பிள்ளை வளரும் நாட்டின் தேசிய ஆசார சீலங்கள், பிள்ளையின் பூர்வீக நாட்டின் ஆசார சீலங்கள் மற்றும் தன்னுடையதிலும் வேறுபட்ட நாகரிகங்கள், கலாசாரங்கள், பண்பாடுகள் ஆகியவற்றை மதித்தலை விருத்தி செய்தல்.

(ஈ)சுதந்திர சமூகமொன்றிலே, புரிந்துணர்வு, சமாதானம், சகிப்புத்தன்மை, ஆண், பெண் சமத்துவம், சகல மக்களுடனும் பல்வேறு இன, தேசிய, சமயக் குழுக்களுடனும் பூர்வீக (ஆதிவாசி) மக்கட் குழுக்களுடனும், நட்புறவு போன்ற பண்புகளுடனும், பொறுப்பாக வாழுவதற்குப் பிள்ளையைப் பக்குவப்படுத்துதல்.

(உ)இயற்கைச் சுற்றாடலை மதிக்கும் மனப் பாங்கை வளர்த்தல்.

2.இவ்வுறுப்புரையின் அல்லது உறுப்புரை 28 இன் எப்பகுதியேனும், போதனா நிறுவனங்களை அமைப்பதற்கும், நடத்துதற்கும் தனிநபர்களுக்கும், சபைகளுக்கும் உள்ள சுதந்திரத்தில் குறுக்கிடலாகாது. ஆயினும், இச் சுதந்திரம், இந்த உறுப்புரையின் முதலாம் பந்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கொள்கைளுக்கும், போதனா நிறுவனங்களில் புகட்டப்படும் கல்வியானது அரசினால் விதிக்கப்பட்ட குறைந்த தராதரங்களுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டுமென்னும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

(அடுத்த வாரம் தொடரும்...)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட்கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை**

**யாழ்ப்பாணம்**

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

(தொடர்ச்சி....)

## பன்னிரு இராசிகளுக்கும் பெப்ரவரி மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| ரா | | செ | |
| பு. சந் | 2006 பெப்ரவரி 1 ராசி நிலை | | (வ) சனி |
| சூ | | | |
| சு | | குரு | கே |

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)

இப்போது சனி வக்ரமாகிவிட்டானே என்பதால் சில நாட்களை கடந்து முயற்சிக்கவும். சொத்து வாகன வகை செலவுகள் வழக்கத்திற்கு மாறாக இருக்கும். தொழில் வகையில் சில வேலைகள் இன்னும் தாமதப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தூரத்து மனிதர்கள் சந்திப்பு மனச்சாந்தியை மட்டும்தான் அளிக்கும். மலைவளம், சூழ்பிரதேச பிரயாணம் இம்மாதம் செலவுகளும் குடும்பத்தில் உண்டாகும். தாய்வகை ஆரோக்கியம் பாதித்தல் மருத்துவச் செலவுகளும் குடும்பத்தில் இடம் பெறும். தொழில் கூட்டு மனிதர்களிடம் புதிய ஒப்பந்தம் உண்டாவது குறிப்பாக நன்மையாகும். அரசியல் உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகளை முடிக்கும் வாய்ப்பு உண்டாகும். இதன்மூலம் வழக்கு வகையும் நன்மையாக முடியும். குடும்பத்தில் தேவைகள் முழுவதுமாக பூர்த்தியாகவில்லை என்றாலும் அவசர பிரச்சினைகளைமுடிக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகள் நினைத்தபடி பலன் தராது. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் இடப்பெயர்ச்சி இலாகா மாறுதலும் இருக்கிறது. எழுத்துமூலம் செய்யும் முயற்சிகள் இப்போது பயன்படாது. தேகசுகம், கல்வி வளர்ச்சி இவைகள் பாதிக்கப்படாது. கலைப்பிரிவு மனிதர்கள் தொழில் நிமித்தம் அலைச்சல் உடையவர்கள். காலம் கடந்து உணவுகொள்வது, அகால உறக்கம் கொள்வது போன்றவற்றினை உண்டாக்கும். குழந்தைகள் மகிழ்ச்சி மிக்கவர்கள். கல்வி உயர்வும் குறித்தபடிஇருக்கிறது. குடும்பத்தில்பெண்களுக்கு வெண்மை நீலக் கல் ஆபரணச் சேர்க்கையும் உண்டாகும். ஆரோக்கியத்தில் கவலை இல்லை. அரசியல்வாதிகளுக்கு மிதமான போக்கு இருப்பதுடன் கௌரவச் செலவுகளும் கடுமையாக இருக்கும். நீங்கள் தன்னம்பிக்கையோடு செயல்பட்டாலும் மூன்றாவது மனிதர்கள் உங்களை குழப்பத்திற்கு உள்ளாக்கி விடுவார்கள். கொடுக்கல், வாங்கல் உங்களுக்கு வேண்டிய நன்மைகளை செய்வர் என எதிர்பார்க்கலாம். இக்காலம் சிலருக்கு திடீர் தனவரவு இருக்கும். சிலருக்கு வாரிசு இல்லாத சொத்து கூட வந்துசேர வாய்ப்பு இருக்கிறது. வடக்கு வடமேற்கு திக்கு பிரயாணம் உங்களுக்கு தொழில் நன்மையை உண்டாக்கும். புத்திர, புத்திரியர்கள் கல்வி பெருமைக்குரியதாக அமைந்து இருக்கும். இப்போது சிலருக்கு அரசாங்க வகை வழக்குத் தோன்றும் என்பதால் தொழில் வகை கணக்குகளை சரிசெய்ய வேண்டும். தூரத்து கடிதங்கள் செய் தொழில் வழிக்கு சிறப்பான அம்சத்தை உண் டாக்கும். சகோதர, சகோதரி வகையில் மனத் திருப்தியான போக்கு இருக்க முடியாது.

### ரிஷபம்
(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

மாதம் முதலிலேயே சில வகையில் சோதனையான விஷயங்கள் இடம்பெறுவது மன உளைச்சலை உண்டாக்கக்கூடியதுதான். சனி வக்ரமும், சத்ரு இல்லத்தில் மறைந்த குருவும்தான் என்றாலும் மறைந்துவிட்ட அசுர குரு முழு காரணகர்த்தா. நண்பர்கள் எப்போதும் உங்களை சுற்றியே இருப்பார்கள். விருந்தினர்கள் வருகை சுபகாரியங்களில் கலந்துகொள்ளுதல் புதிய நகை அணிகலன்கள் வாங்குவது போன்றவைகள் இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு திடீர் பிரயாணம் உண்டாகும். பெரிய மனிதர்கள் முக்கியத்துவம் சந்திப்பு சில வழியில் எழுத்துத்தன்மையை உண்டாக்கவல்லது. எப்போதோ பட்ட கடன்கள் இப்போது தலைதூக்காமல் இருக்காது. சிலருக்கு வழக்கு ரூபத்தில் சலனத்தை உண்டாக்கும். உத்தியோகப்பிரிவு அண், பெண்களுக்கு பதவி உயர்வு, பாராட்டு, பணவரவும் இருக்கும். மாணவர்கள் வெற்றி உறுதியாகும். கலைத்துறையினர்கள் புதிய ஒப்பந்தம் தூரத்து பிரயாணத்தைப் பெறுவதும் திடீரென்ற அடையக்கூடியவர்களே. கணவன், மனைவி உறவு கண்ணியமானது. பெரிய மனிதர்களின் தொடர்பு மகிழ்ச்சிக்குரியதே. குடும்ப பிரச்சினைகளைப் பற்றி கவலை வேண்டாம். குறித்தபடி நடக்கும். பழைய பொருட்கள் விற்பது அல்லது மாற்றி அமைப்ப தும் உண்டாகும். பிற்பகுதியில் சூரியன் நீச வீட்டில் சென்றுவிடுவது உங்களை தவறான வழியில் செல்லவும் வாய்ப்பை உருவாக்கிவிடும் என்பதைக் கவனிக்கவும். வேறு இனத்தவர் தொடர்பும் இப்போது சோறு போடாவிட்டாலும் சுகத்தை அளிக்கும். கலைப்பிரிவினருக்கு கவர்ச்சியாக வருவாயும், ஆடம்பர செலவுகளும் இருக்கின்றன. அட்டமத்து செவ்வாய் சிலருக்கு வழக்கு என்ற போக்கு இடையே தோன்றும். கெட்ட நட்பை விலக்க முயற்சிக்கவும். என்றாலும் விதி யாரை விட்டது? பிரயாணம் உடனுக்குடன் இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் போக்கு இம்மாதம் அவ்வளவு சிறப்பாக இல்லை. கூட்டு மனிதர்களிடமும் பேச்சை அளவிட்டு பேசுவது அவசியமாகும். பழைய நண்பர்கள் சிலரை உங்கள் வழிக்கு திருப்பும் முயற்சியும் இருக்கத்தான் செய்யும். இதில் நீங்கள் இப்போது வெற்றி அடைய முடியாது. சற்று காலதாமதமாகும். காரணம் ஏழரைக் கால சனிதான். குழந்தைகள் வகை ஆரோக்கிய பாதிப்பு செலவைக்-கொடுக்கும். உங்கள் உடல் நலத்தை கவனிக்க வேண்டும். இந்த ராசி குடும்பப் பெண்களுக்கு பொறுப்புகளும் வேலைகளும் சற்றுக் கூடுதலாக இருக்கும். கொடுக்கல் வாங்கலும் இவர்கள் ஈடுபாடு கூடுதல்தான். வழக்கு இருப்பதோடு தைரியமாக இருக்கலாம். அவை பலம் குறைய அங்காரகன் உதவியாக நிற்கிறான். சிலருக்கு புதுமணம் ஏற்கும் வாய்ப்பும் தவிர்க்க முடியாது. கடனும் வழக்கும் வெகுதூரத்தில் நிற்கின்றன. காணாமல் போன பொருட்களும் இப்போது கைக்கு வந்து சேரும். உத்தியோகப் பிரிவு மனிதர்களுக்கு பதவி உயர்வு, பாராட்டுகள், விருந்து கொள்வது போன்ற நன்மைகள் இருக்கின்றன. தொழில் வழி திட்டங்களை துரிதப்படுத்துங்கள். கொடுக்கல் வாங்கல் குறித்தபடி கூடி வந்துவிடும்.

### மிதுனம்
(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

சில வகையில் வேண்டாத பிரச்சினைகளை உருவாக்கும். விருந்துக்குப் போனாலும் அங்கே வேண்டாதவர்கள் சந்திப்பு உண்டாவதை விலக்க முடியாமல் போய்விடக்கூடும். என்றாலும், இதனால் நல்லவர்கள் சந்திப்பும் உண்டாகும். இந்த அமைப்பு உங்களுக்கு கௌரவத்தை உயர்த்துவது அல்லாமல் பல பெரிய மனிதர்களின் தொடர்பும் உண்டாகக்கூடியனவே. அரசியல் மனிதர்களுக்கு பல பெரிய பொறுப்புகள் உண்டாவதும், கௌரவப் பதவியை ஏற்பதும் குறிப்பிடத்தக்கது. தனகாரனான சுக்கிரன், சிலருக்கு அதிர்ஷ்ட திருமணத்தை அல்லது குடும்பத்தைக் கொடுப்பதால் புத்திர வகை சிறப்பான முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். எந்த வகையான பாதிப்பும் செய்ய மார்க்கமில்லை. நட்பு வகை கடிதத் தொடர்பு சம்பந்தமான பிரச்சினைகள் சில முன் நிற்கும். இதனால் முக்கியஸ்தர்கள் கருத்து வேறுபாடுகள் தவிர்க்க முடியாது. நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். குடும்பத்தில் சிக்கலை வளர்க்கவேண்டாம். மாணவ-மாணவிகள் கவனமாகப் படிக்கவேண்டும். தற்போது குரு உங்கள் ராசிக்கு நல்லவன் என்பதைக் கவனிக்கவும். கொடுக்கல் வாங்கல் மிதமாகவே இருந்தாலும் பணப் பிரச்சினை இல்லை. குடும்ப வகையில் திருப்தி இல்லை. உறவினர் வகையில் ஏற்பட்ட சிறு குழப்பம் அல்லது மனபேதம் தொடர்ந்துகொண்டே இருக்கும். பிரயாணம் குறித்தபடி இருக்காது. திருமணம், இதர சுப விஷேடங்கள் குறித்த நிகழ்ச்சிக்கு செல்வது, செலவுகளும் இருக்கிறது. கூட்டுத் தொழில் மனிதர்கள் இணக்கமான சூழ்நிலையில்தான் இருப்பர். சிலர் புதிய தொழில் சிந்தனை உடையவர்களாகவும் கூடிப் பேசி நன் முடிவுக்கு மட்டுமே வரமுடியும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு கல்வி உயர்வு, இலாகா மாறுதல் உறுதியாகும். வெற்றிக்கும் முயற்சிக்கும் குறையில்லை. செய்யும் தொழில் இணைக்க முடியாத காதல் விஷயங்கள். ஆனால் சில வகையில் அவர்களை இணைத்துக்கொண்டு வருகிறீர்கள். இது எங்கே போய் முடியும்? என்கிறது சுக்கிரன். தொழில் வழி தன நிலையில் பாதிப்பு இல்லை. ஆனால் வேலையாட்களின் போக்கு சிலசமயத்தில் உங்களை நிலை குலைய வைத்துவிடும். உங்கள் வளர்ச்சி கண்டு உடனிருப்போரே பொறாமைப்பட வேண்டி இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தவிர வேறு ஒன்றுமில்லை. அயல்நாட்டுப் பிரயாணத்தை ஏற்க வேண்டி இருக்கும். நீங்கள் புதிய கருத்துக்களை உங்கள் தொழிலில் புகுத்த உங்கள் பழைய நண் பர்கள் உதவியாக இருப்பர். படிப்படியே செய் தொழிலில் வேகம் பெறும். குடும்ப வகையினருக்கு புது உடைகள், பழைய ஆவணங்களும் வந்துசேரும். இப்போது அறிமுகம் உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு சில புதிய மனிதர்கள் சந்திப்பு பெரிய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். கலைப்பிரிவினருக்கு இலட்சக் கணக்கில் லாபத்தை உண்டாக்குவான். இந்த சுக்கிரன் நல்ல மனிதர்கள் சிலரையும் இப்போது அறிமுகம் செய்து வைப்பான். இப்போது உங்கள் ஜன்மத்து குரு, குடும்பத்து நண்பர்கள் உறவினர்கள் திருமண இல்லங்களுக்கு சென்று விருந்துண்பதும் உண்டாகும். இங்கே சந்திப்பவர்கள் சிலர் உங்க ளுக்கு ஆகாதவர்கள் உண்டு. அவர்கள் மூலம் அறியப்படும் தகவல்கள் உங்கள் தொழிலுக்கு மிக மிக முக்கியம் வாய்ந்தவையாக இருக்கும். பிரயாணம், அடிக்கடி கடிதத் தொடர்பு அன்பை வளர்க்கும். தொழில் வழியில் உள்ள ஆட்களில் சிலர் சுமூகமாக இல்லை. சில சமயம் கசப்பான வார்த்தைகளும் உச்சக்கட்டத்தை அடையும்.

### கடகம்
(புனர்பூசம் 4 , பூசம், ஆயிலியம்)

அவ்வளவாக நன்றாக இல்லையே என்பது குறைதான். குடும்ப செலவுகள் குறிப்பிட்டதற்கு மேல் போய்விடும். புது உடைகள்,பழைய பொருட்கள் சேர்க்கையும் இருக்கிறது. குடும்பத்தில் தடைப்பட்டிருந்த காரியங்களுக்கு மதிப்பு இப்போது அதிகமாகும். தன விரயத்தைப் பற்றி இல்லை காரிய சாதனைதான் பெரியது. பூமிப்பொருள் மீது பணம் கொடுப்பதும், உறவினர் நோய் வாய்ப்பட்டிருந்தவருக்கு உபகாரம் செய்வதும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைவு இருக்கிறது. புதுமணத் தம்பதிகளுக்கு இன்ப விருந்து அளிக்கும் காலம் அல்லவா? தைப் பொங்கலை இனிமையாகக் கொண்டாட எல்லா வகையிலும் நன்மை இருக்கிறது. இந்த ராசி கொன்ட்ராக்ட் தொழில் உள்ளவர்களுக்கு பில் தொகை தக்க சமயத்தில் வந்து சேர்ந்துவிடும். சில குடும்பத்திற்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். கணவன், மனைவி உறவு இன்பமயமானது. சிலர் இக்காலக் கடைசியில் புது இல்லம் குடிபுகுதல் போன்ற நன்மையும் பெறுவர். குழந்தைகள் நலம் திருப்தியாகவே இருக்கிறது. வழக்கு தோன்றி வெற்றி பெறுவீர்கள். வேகமிக்க செயல் மற்றவர்களை அதிர்ச்சி அடையச் செய்யும். தூரத்து உறவினர் தொழில் சம்பந்தமான வழக்குகளுக்கு உதவியாக இருப்பர். வழக்கு இருப்பவர்களுக்கு நல்ல முடிவு உண்டாகும். வாகனச் செலவு, உறவினர்களுக்கு உபகாரம், விருந்து ஏற்பது போன்ற நன்மைகள் மத்திய பகுதிக்கு மேல் இருக்கும். குடும்ப வகையில் அதிக கவனம செலுத்தவும் தொழில் வழியில் எவ்வளவுதான் வேகம் இருந்தாலும் ஆதாயம் அசௌகரியமும் உண்டாகும். அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினை முடிப்பதற்கு அவசியமாக இருக்கும். மேல் அதிகாரிகள் முதல் கீழ்நிலை ஊழியர்களும் இணக்கமாக செயல்படுவர். தன நடமாட்டம் தாராளமாகவே இருக்கும். கலைப் பிரிவினருக்கு கடுமையான உழைப்பு தேவைப்படுகிறது. குடும்பத்திற்கு புது உடைகள் அணிகலன்கள் சித்தியும் உண்டாகும். வயதில் மூத்தவர்கள் மருத்துவச் செலவுகளும் இடம்பெறும். தொழில் வழி வேலைகள் மட்டும் இல்லாமல் குடும்பத்து வேலைகளும் ஒன்று சேர்ந்துவிட்டன. பிரயாணம் ஏற்பது திருமணம் குறித்ததாகவும் இருக்கலாம். கட்டுமான வேலைகளை முடிப்பதில் கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது. கலைப் பிரிவினருக்கு முயற்சி இருக்கும் அளவு திருப்தியான போக்கு இல்லை. வர வேண்டிய பணம் உரிய நேரத்தில் வந்து சேராமையினால் தொழில் மந்தம் இருக்கும். இதனால் தொழில் வகையில் உங்கள் கவனம் குறைந்தே காணப்படுகிறது. மறைத்து வைக்கப்பட்ட விஷயங்களில் சில வெளியாகும். கடன் வழக்கு வகைகள் கட்டுப்பட்டே இருக்கும்.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரம் 1)

இப்போது வக்ர சனிதானே என்று எதிலும் எச்சரிக்கை இல்லாமல் செயல்பட வேண்டாம். சனி, சனிதான். எச்சரிக்கையாகச் செல்லவேண்டும் எதிலும் திட்டமிட்ட செயல்தான் சிறப்பானது. உங்கள் புதிய முயற்சிகள் ஓர் அளவு திருப்தியாக உருவாகி வரும். நண்பர்கள் வகையில் முக்கிய ஆலோசனைகளைப் பெறுவது அவசியம். சனி உங்கள் போக கிரகமாக இருந்தபோதிலும் பகைவன் சாரம் பெற்றது நல்லதல்ல. மேலும் கணவன், மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும். சகோதர, சகோதரி வகையில் மட்டும் இடை இடையே கருத்து மோதல் இருக்கும். பெண்கள் தேக ஆரோக்கியத்தைக் கவனிக்கவேண்டும். அயல் நாட்டு கடிதத் தொடர்பு திருப்தியாகவே இருக்கிறது. கடன் வாங்கி உங்கள் கவனத்தை கவருவதாகத்தான் இருக்கிறது. வழக்கு சிலருக்கு வேகம் உடையதுதான் என்றாலும் கஷ்டமில்லாமல் காரிய சாதனைகள் இருப்பதை உணருவீர். குரு சார சனியாயிற்றே. புண்ணிய ஸ்தல பிரயாணமும் மகிழ்ச்சியும் உண்டு. தேக ஆரோக்கியம் மட்டும் சீதளத்தால் பாதித்து குணமாகும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறு போன்றவைகள் உண்டாகி மருத்துவச் செலவும் இடம்பெறும். அட்டமச் சனி காலில் சிறு காயத்தையும் உண்டாக்கும். சகோதரன் அல்லது சகோதரி வகையில் செலவுகளும் இடம்பெறும். பகைவர்கள் உள்ள காலம்தான் இது என்றாலும் உள்ளே பகைத்துக் கொண்டிருக்கும் விஷயங்களை வெளியாக்க வேண்டாம். கடைசியில் இதற்கு ஒரு நன் முடிவு ஏற்படும். உறவினர், நண்பர்களும் முன்பு பகைக்கப்பட்டவர்கள் இப்போது நெருங்கிவரும் காலமிது. தொழில் கூட்டு வகையில் வேகம் பெற ஆரம்பித்து இருக்கிறீர்கள். விட்டுப் பிரிந்தவர் தானே வந்து சேருவார். குடும்ப வகையில் பொருளாதாரம் சீர் அடைந்துவிட்டதாக எண்ண வேண்டாம். தொடர்ந்து காரிய சித்தியைப் பெறுவீர்கள். விட்டுப் போன பழைய விஷயங்கள் சில பேச்சளவில் மீண்டும் தொடரும். மனம் விட்டுப் பேச முடியாமல் இருந்த காரியங்கள் செயலுக்கு வரும் மாதம். திடீர் தன வருவாயை உண்டாக்குபவன் குரு. குடும்ப உறவில் நடக்கும் சுப விஷேடங்களில் கலந்து கொள்வது விருந்து உண்பதும் உண்டு. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகளிலும் உங் களுக்கு ஆதாயம் இருக்கிறது. நீங்கள் தேக்கி வைத்திருந்த வேலைகளை தொடர்ச்சியாக செய்ய முனையும்போது சில இடையூறுகள் இருக்கத்தான் செய்யும். அதனால் மனத்தளர்ச்சி அடையக்கூடாது. உறவினர்கள் வகையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளையும் கண்டுகொள்ளாமல் செல்வதுதான் சிறப்பு. கணவன், மனைவி உறவு மாத ஆரம்பத்தைவிட பிற்பகுதியில் பெருமைப்பட இயங்கிவரும். சொத்து மூலம் ஏற்பட்டிருந்த வழக்கு நீடித்துக்கொண்டே போகும்.

### கன்னி
(உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2)

சொத்து வகையில் சிலருக்கு வழக்கு இருப்பின் தள்ளிப்போவதும் முடிந்தால் நன்மையுண்டு. குழந்தைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியை உண்டாக்கும். உங்கள் முயற்சிக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். தொழில் ஸ்தாபன வகையில் உங்கள் முன்னேற்றம் பிறரால் பாராட்டப்படும். கூட்டு மனிதர்களும் மனத் திருப்தியடைவர். மறைமுகச் சத்ருவும் மீண்டும் தன் செயலை செயல்படுத்த முடியாமல் தவிப்பர். கடன் இருக்கின்றன. ஆனால் தொழில் வளர்ச்சிக்கு முன் கடன் சாதாரணமே. காலம் கடந்துபோன விஷயங்கள் சிலவற்றில் கவனஈர்ப்பு அதிகமாக இருக்கும். மூன்றாவது மனிதர்கள் வார்த்தைக்கு அதிகமாக மதிப்புக் கொடுத்து நடக்கவேண்டி இருக்கும். அலைச்சல் அதிகமாக இருந்தபோதிலும் தொடர்ந்து வேலைகள் நடைபெறாமல் முடிந்துவிடும். இரு குடும்பம் உள்ளவர்களுக்கு மறுபகுதி திருப்தியாக இல்லை. இப்போது சரியாக பலம் பெற்றிருப்பது போல் சுக்கிரனுக்கு பலம் இல்லை. கலைப்பிரிவினர்களுக்கு கடைசியில் அதிகமான நன்மைகள் இருக்கின்றன. வழக்கு வேகம் குறைந்துவிடும். லாட்டரி போன்ற வழியில் சிலருக்கு எதிர்பாராத தனமும் வந்துசேரும். அரசியல்வாதிகளுக்கு பிரச்சினைகள் ஆரம்பத்திலிருந்தே விட்டு விட்டு இருக்கும். அவர்கள் கல்வி, உடை, முன்னேற்றம் இவைகளில் கவனம் தேவைப்படுகிறது. இயந்திரம், வாகனத் தொழில் மூலம் எதிர்பார்த்த ஆதாயம் குறித்தபடி பெரும் அளவில் இல்லை. முக்கியஸ்தர்களைச் சந்தித்துவிட்டு வந்தவர் மேலும் அயராமல் முயற்சி உடையவர்களாக இருக்கவேண்டும். கடைசிப் பகுதியில் வழக்கு கடன் விஷயங்கள் கட்டுப்பட்டே இருக்கும். தொழில்கூட்டு மனிதர்களிடம் அடிக்கடி மனபேதம், மறைக்கப்பட்ட காரியங்கள் சில வெளியாவதால் முடிக்கமுடியாமல் நின்ற வேலை முடிந்துவிடும். வழக்கு ஒன்றும் செய்துவிடாது பயம் வேண்டாம். வியாபாரிகள் இரும்பு இயந்திரப் பொருள்கள் மூலவஸ்துக்களால் தன ஆதாயத்தைப் பெறுவர். நீங்கள் எதிர்பார்த்தவர் நேரே வந்து சந்திப்பதால் உங்களுக்கு பலவழி ஆதாயம் இருக்கிறது. தூரத்து உறவினர் தொழில் சம்பந்தமான வழக்குகள் உதவியாக இருப்பர். வழக்கு இருப்பவர்களுக்கு நல்ல முடிவு உண்டாகும். வாகனச் செலவு, உறவினர்களுக்கு உபகாரம், விருந்து ஏற்பது போன்ற நன்மைகளும் மத்தியப் பகுதிக்கு மேல் இருக்கும். குடும்ப வகையில் அதிகமான கவனம் செலுத்தவும். தொழில் வழியில் எவ்வளவுதான் வேகம் இருந்தாலும் ஆதாயம் குறைவுதான். வழக்கு வேகம் குறைந்துவிட்டதால் பயம் வேண்டாம். கணவன் மனைவி உறவு சீராகவே இருக்கும். கணக்கை ஒழுங்காக வைத்திருக்கவும் கவனமறதியினால் சிறு நட்டமும் கடைசியில் இடம் பெறும். பிரயாணம் பயனுடையது. குடும்ப உறவில் ஏற்படும் சில சுப செலவுகள் உங்களை விடாது. உங்கள் ஆரோக்கியத்திலும் மிகவும் கவனம் எடுத்துக்கொள்வது அவசியம்.

(தொடரும்...)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

7 மீள்பார்வை



"ஏண்டா கூத்தாடிப்பயலே" என்று ஆரம்பித்தார்.(நான் பிற் காலத்தில் கூத்தாடியாக வருவேன் என்று அன்றைக்கே நினைத்தாரோ என்னவோ அதனால் அவர் அப்படிக் கூறினார் போலும்)

"அடேய் கூத்தாடிப் பயலே, உனக்கு என்ன தைரியம் இருந்தால் நீ என் எதிரியின் படையில் சேர்ந்து கூத்தாடுவாய் என்று கூறி அடித்தார். ஆனால், நான் அதையே நினைத்துக் கொண்டு காய்ச்சல் வந்து படுத்துவிட்டேன். அப்பொழுது எனக்கு "ஏன் நாமும் ஒரு நடிகனாக ஆகக் கூடாது என்று தோன்றியது. அது மட்டுமில்லை எனக்குச் சுதந்திரவெறி வேறு மனதில் , ஆழமாகப் பதிந்திருந்தது.

நாட்டுப்பற்று இருக்கின்றது. நடிப்பில் ஆர்வம் இருக்கிறது. நாம் ஏன் கட்டபொம்மனாக ஆகக் கூடாது? என்று நினைத்துக்கொண்டே இருந்தேன். அந்த நேரத்தில் யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை என்பவரின் நாடகக் கம்பெனியான மதுரை ஸ்ரீ பாலகான சபாவினர் திருச்சியில் முகாமிட்டிருந்தனர் . நாடகம் முடிந்து, முகாமை மூட்டை கட்டிக்கொண்டு, அவர்கள் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் நான் சென்று தெருவிலே நின்று கொண்டிருந்தேன். சக்கரபாணி என்ற ஒரு நடிகர் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். எனக்கு நன்றாக ஞபாகம் இருக்கிறது. அவர் என்னை உள்ளே கூப்பிட்டார். ஏம்பா , ஏன் இங்கு நிற்கிறாய்? என்று கேட்டார்.



வீரபாண்டிய கட்டபொம்மனாக...

நான் நாடகக் கம்பெனியில் சேர வேண்டும் என்றேன் . அதற்கு அவர் நாடகக் கம்பெனியில் சேர வேண்டும் என்றால் பாட்டெல்லாம் பாட வேண்டுமே என்றார் . உடனே நான் நன்றாகப் பாடுவேன் என்றேன்.

ஆமாம் அப்பொழுது நான் உண்மையிலேயே நன்றாகப் பாடுவேன். நன்றாக நடனமாடுவேன். அப்பொழுது நான் கட்டபொம்மன் பாட்டெல்லாம் பாடுவேன். அவர்கள் பாடுவாயா? என்று என்னைக் கேட்டவுடன் நான் பழனிவேல் இது தஞ்சம் என்று ஒரு பாட்டுப் பாடினேன் . அது மிகவும் நன்றாக இருந்தது. உடனே என்னை நாடகக் கம்பெனியில் சேர்த்துக்கொண்டார்கள். ஆனால் என்னை வெளியே விடவில்லை. ஏனென்றால் நான் பார்ப்பதற்குக் கொஞ்சம் நன்றாக இருப்பேன். அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது எனக்கு முன்னதாகவே அந்த நாடகக் கம்பெனி யில் காகா ராதாகிருஷ்ணன் இருக்கிறார் என்று.

காகா ராதாகிருஷ்ணன் என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர். எனக்குப் பால்ய நண்பர் . அவர் எனக்கு முன்னாலேயே நாடகத்தில் சேர்ந்துவிட்டார். சரி அவருக்குத் தெரிந்தால் வீட்டுக்குச் சொல்லிவிடுவாரோ? சொன்னால் நம்மை மறுபடியும் அடித்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டு சென்றுவிடுவார்களோ? என்று நினைத்து நானும் வெளியிலேயே வரவில்லை. நாடக முகாம் வீட்டிற்குள்ளேயே இருந்துவிட்டேன்.

எல்லோரும் அந்த நாடகக் கம்பெனியை காலி செய்து கொண்டு வெளியூர் போகும் போதுதான் காகா ராதாகிருஷ்ணன் என்னைப் பார்த்தார்.

டேய்! இங்கே எப்படிடா வந்தாய் கணேசா? என்றார். உடனே நான் வெளியில் தயவு செய்து யாருக்கும் சொல்லிவிடாதே. நான் வீட்டுக்குத் தெரியாமல் வந்து இங்கே சேர்ந்துவிட்டேன் என்று கூறினேன். ஏனென்றால் அப்பா, அம்மா இல்லாத அனாதை என்று சொல்லித் தான் அந்த நாடகக் கம்பெனியில் நான் சேர்ந்திருந்தேன். அதனால்தான் அவர்கள் என்னை சேர்த்துக்கொண்டார்கள்.

அதன் பிறகு அந்த நாடகக் கம்பெனிக்காரர்கள் திருச்சியில் இருந்து, திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டார்கள் . அவர்களோடு நானும் புறப்பட்டேன். என் நாடகவாழ்க்கை என் ஏழாவது வயதில் இவ்வாறு தொடங்கியது.

டி. எஸ். என்: யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வீட்டை விட்டு வந்து எனக்குத் தாய் தகப்பனார் இல்லை என்று சொல்லுமளவுக்கு உங்களுக்குத் துணிச்சல் எப்படி வந்தது?

சிவாஜி: என்ன கேட்க வருகிறீர்கள் என்று தெரிகிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏதோ பூதம் மாதிரி விவேகம் ஒன்று இருக்கிறது. அது சமயம் வரும்போதுதான் வெளிப்படுகிறது. அந்த விவேகம் வெளிப்பட வேண்டிய வேளையில் எனக்கு ஒரு ஊன்று கோலாகவும், தூண்டு கோலாகவும் இருந்தது, அந்தக் கட்டபொம்மன் நாடகம்.

அந்த சிறுவயதில் என் மனதில் ஆழப்பதிந்தது கட்டபொம்மன் கூத்து தான் . அது தான் பிற்காலத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனாக நான் நடித்துப் பெயரும் புகழும் பெறக் காரணமானது. எப்படியாவது நாடகக் கம்பெனியில் சேரவேண்டும் என்ற ஆசையால், "எனக்குத் தாய் தாந்தை இல்லை" என்று பொய் சொன்னேன். பொய் கூறுவது தவறுதான். ஆனால் அது தவறா? சரியா? என்று நினைக்கும் வயதா அது ? இல்லையே !

எப்படியோ நாடகக் கம்பெனியில் சேர்ந்து, நான் நினைத்ததை வெளிக்கொணர வேண்டும் என்ற உத்வேகத்தில் தான் , அப்படிச் செய்தேன். அதற்குப் பிறகு நான் வாழ்ந்த காலத்தில் நினைத்தைச் சரியாகச் செய்து முடிக்க முயன்றேன். எனக்குள் இருந்த பூதமும் பூரணமாக வெளிவந்தது.

அந்த வயதில் இவ்வளவு துணிச்சலுடன் முடிவெடுக்கிற திறமை ஏற்பட வேண்டுமென்றால் உள்ளுக்குள்ளே நடிகனாக வேண்டும் என்ற வெறியாகக் கூட அது இருந்திருக்கலாம். எப்பொழுதுமே ஒரு விஷயத்தை நாம் நினைத்தோமென்றால் நினைக்கிற விஷயம் தான் நமக்குப் பெரிதாக இருக்கும். அது பெரியதா? சிறியதா? என்று மற்றவர்கள் கூறும் பொழுதுதான் நமக்கு உண்மை தெரியும்.

நான் நாடகக் கம்பெனியில் சேர்ந்தேன். திண்டுக்கல்லுக்குச் சென்றேன் . அங்கே நன்றாகப் பயிற்சி கொடுத்தார்கள். ஏற்கனவே கொஞ்சம் ஆர்வம் இருந்ததாலோ அல்லது எனக்குள் இருந்த பூதம் மாதிரியான விவேகமோ,என்னை ஒரு நடிகனாக்கியது. என்னை நடிகனாக உருவாக்கிய எங்கள் ஆசிரியர் பெயர் என்ன தெரியுமா ? என்றுமே மறக்கமுடியாத பெயர் "சின்ன பொன்னுசாமி படையாச்சி"

(தொடரும்)

# சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு அனுகூலம்

(கொழும்பு)

சமுர்த்திப் பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்பு அனுகூலங்களாக இந்த வருடத்தில் 10 கோடி 73 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

மகப்பேறு, திருமணம், இறுதிச் சடங்குகள் போன்றவற்றிற்கென் இந்த நிவாரண உதவிகள் வுழங்கப்பட்டன.

மகப்பேறு, திருமணம் ஆகியவற்றிற்கென 2 ஆயிரம் ரூபாவும் மரணச் சடங்குகளுக்கென 5ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள 21 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 60 ஆயிரம் குடும்பங்கள் இதனால் பயனடைந்துள்ளன.

சமுர்த்தி நிவாரணத்தை மேலும் 50 சத வீதத்தினால் அதிகரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார். (த-7)

# கொழும்பு விமான நிலையத்தில் சோனியா காந்தி -ராகுல்

(கொழும்பு)

இந்தியாவின் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மாலைதீவு செல்லும் வழியில் கொழும்பு விமான நிலையத்தில் அரை மணிநேரம் தங்கியிருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் யு.எல் -193 மூலம் அவர் கொழும்பு வந்து அங்கிருந்து மாலைதீவு சென்றதாகத் தெரியவருகிறது.

சோனியா காந்தி வந்த விமானத்திலேயே வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர கொழும்பு திரும்பினார். இருப்பினும், சோனியாவின் பயணம் குறித்து அவர் அறிந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

தனது மகன் ராகுல் காந்தியுடன் புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக சோனியா காந்தி மாலைதீவு சென்றதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற)

# பொலிஸ் திணைக்களம் தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு

## கொட்டகதெனிய கோரிக்கை

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களம் தொடர்பில் ஆராய ஜனாதிபதி ஆணைக் குழுவை நியமிக்க வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரும் முன் னாள் பிரதிப் பொலிஸ்மா அதி பருமான எச்.எம்.ஜி.பி. கொட்டக தெனிய தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சில பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்து தான் எதிர்ப்பினைத் தெரிவித்ததாக கூறிய அவர், அதிகாரிகள் தவறு புரிவார்களாயின் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் எவ்வாறு நம்பிக்கை வைப்பார்கள் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மீது தான் ஒருபோதும் குற்றம் சுமத்தவில்லை என்று கூறிய கொட்டகதெனிய இன்று எமக்கு தேவை ஒழுக்கமான கடமையைச் சரியாகச் செய்யும் பொலிஸ் திணைக்களமே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை ஏற்படுத்தினால் பொலிஸ் அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கமைய தெரிந்துகொள்ள முடியும் என்றும் கொட்டகதெனிய மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# மதுபாவனையிலிருந்து மீள்வதற்கான புனர்வாழ்வு நிவாரண வேலைத்திட்டம்

(கொழும்பு)

மதுபாவனைக்கு அடிமையானவர்கள் எந்தப் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கு வழிகாட்டும் விசேட புனர்வாழ்வு நிவாரண வேலைத் திட்டம் ஒன்றினை சமூக சேவைகள் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

போதைவஸ்து பாவனைக்கு அடிமையானவர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்று நிறுவப்படுமென சமூகசேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

போதைவஸ்து பாவனையாளர்களின் தனிப்பட்ட உளவியல் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் விசேட உளவியல் வைத்திய நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் இந்தப் புனர்வாழ்வு நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மது பாவனையாளர்களுக்கு உடல் உள ரீதியான சிகிச்சைகளுடன் தொழில் சார் வழிகாட்டல்களும் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக 30ற்கு குறைவான இளைஞர்கள் மாத்திரமே இந்தப் புனர்வாழ்வு முகாமைத்துவத்தில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இந்த நிலையத்தில் சேர்வதன் மூலம் போதைவஸ்து பாவனையில் இருந்து விடுபட்டு புனர்வாழ்வை ஆரம்பிக்க விரும்புபவர்கள் உடனடியாக சமூக சேவைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு திணைக்களத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-9)

# மட்டக்களப்பில் இருவேறு கைக்குண்டுத் தாக்குதல்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் பொலிஸ் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் பொலிஸாருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இனந்தெரியாத நபர்களினாலேயே இக் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து அப்பகுதிகளில் படையினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு டிப்போவுக்கு அருகாமையில் சென்று கொண்டிருந்த படையினரின் 'ட்ரக்' வண்டியை நோக்கி கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் அளவில் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் அதில் பயணம் செய்த படையினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. படையினர் பயணம் செய்த 'ட்ரக்' சிறுசிறு சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-8)

# தேசிய கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சை – 2006

(நேற்றைய தொடர்ச்சி...)

## சமூக விஞ்ஞானம்

எம்.பி.நுஷ்ரா ரபி (ஆரையம்பதி), ஜே.அனுசா (நாகர் கோவில்), ஏ.ஜி.முஷாரபா (காத்தான்குடி), எஸ்.எவ்றிகானா (கொதியாகும்பற), எம்.ஐ.அஸ்மின் (பலகல), எம்.திசாருபன் (பூநகரி), எஸ்.வாரணி (யாழ்ப்பாணம்), ஜி.ஈ.வினோஜினி (முல்லைத்தீவு), எம்.எம்.எவ்.பகீமா (அவிசாவளை), கே.சிவதர்சினி (கிளிநொச்சி), பி.சுகிஷன் (முள்ளியவளை), ஆர்.சுஜாதா (புதுக்குடியிருப்பு), எஸ்.லஷ்மிபிரபா (யாழ்ப்பாணம்), மை.பிரேம்நாத் (வவுனியா), தி.தர்சிகா (சாவகச்சேரி), எம்.ரி.நசுகா (டெனிபிற்றியா); வி.மண்டலேஸ்வரன் (பளை), எஸ்.ஏ.எவ்.ருமெல்ஷா (வெரல்லாகம), பி.பார்த்தீபன் (வரணி), எம்.எச்.எஸ்.யெஸ்மினா (மருதமுனை -03), பி.கைதேகி (எழுதுமட்டுவாழ்), எம்.ஜே.வைஸ்மிலா (மாவனல்ல), எம.ஏ.ஹஸ்மி (பாலமுனை-03), ஈ.அஜந்தினி, ஆர்.ஜெனனன (கிளிநொச்சி), எம்.முகமட் உவைஸ் (நிந்தவூர்14), ஆர்.ரிஸ்காலினி (அக்கரைப்பற்று), ஏ.எல்.எம்.கலீம் (ஒலுவில்-05), கே.உதயலதா (முள்ளியவளை), கே.தீவிகா (சாவகச்சேரி), பி.சுரேஷ் (பருத்தித்துறை).

ரி.றமேஷ் (வவுனியா), ஏ.யுமானா (பாலமுனை-03), கே.ஜெகரூபன் (இளவாலை), ஏ.கந்தசாமி (கிளிநொச்சி), எம்.ஐ.ஏ. ஜபான (சம்மாந்துறை), ஏ.ஏ.ஜெஷிறா (நிந்தவூர்-19), எஸ்.பிரதீபன் (சுன்னாகம்), ஏ.அனிதா (பருத்தித்துறை), என்.என்.பேகம் (அக்கரைப்பற்று-04), ஏ.சக்தியன் (கோமாரி), எம்.ஆர்.எவ். றிவ்னா (கலகதெனா), எம.எம்.முவாரிஷ (மருதமுனை-03), எம்.எச்.எம்.சாமில் (கப்புகஸ்தல்லாவ), வி.கணேஸ்வரன் (வீரவல), எம்.எஸ்.எம்.ரமீஷ் (கப்புக்கஸ்தல்லாவ) பி.நிரன்சனா (யாழ்ப்பாணம்), எம்.எம்.டயானா (மானிப்பாய்), ஜே.ஜெதீபன் (புத்தூர்), ஆர்.சோபீகா (இயக்கச்சி), ரி.திருமாலினி (கோப்பாய்), ஜே.துஷ்யந்தினி (யாழ்ப்பாணம்), வி.வனஷா (யாழ்ப்பாணம்), எஸ்.டெமியா (யாழ்ப்பாணம்), ரி.கிருபா (சங்கானை); ரி.காயத்ரி (வல்வெட்டித்துறை), எஸ்.இந்திராதேவி (மானிப்பாய), கே.சிந்துஷா (கரவெட்டி), ஏ.சாமினி (சண்டிலிபபாய்), பி.தாட்சாயினி (பண்டத்தரிப்பு), எஸ்.சிவசொரூபன் (தெல்லிப்பழை), ரி.கந்தரூபன் (கிளிநொச்சி), எஸ்.பிரேமாவதி (கிளிநொசசி), எஸ.காண்டீபன் (புன்னைநீராவி), எஸ்.எனிடா (மன்னார்).

எவ்.டி.வசந்தகுமார் (மன்னார்), எவ்.ஏ.ஜெயந்தன் (மன்னார்), எஸ்.சுசீலன் (முல்லைததீவு), ஜே.நிரனசனா (முள்ளியவளை), ஆர்.சைலசாங்கினி (மல்லாவி), ரி.கார்த்திகா (வவுனியா), வி.ஜடா (வவுனியா), கே.நவயுகா (வவுனியா), எஸ்.ஆனந்தி (திருகோணமலை), ட்பிள்யூ.ஏ.கசூல் அஸ்மி (திருகோணமலை), ஆர்.றிஸ்மி (மூதூர்-01), எஸ்.எம்.அமன் (சாய்ந்தமருது 01), ஐ.எம்.நவாஸ (மருதமுனை-02), ரி.ஜெலசி (கல்முனை), ஏ.எச்.எம்.அனீஸ் (சாய்நதமருது-12), ஆர்.சுதர்சினி (கல்முனை-02), என்.கே.எம்.மிஸ்வர் (அட்டாளைச்சேனை-12), ஏ.முகமட் றிஷ்வான் (சம்மாந்துறை), செந்தில்நாதன (சம்மாந்துறை), எம்.எஸ்.எம.சம்சாம் (கற்பிட்டி), என்.பி.எம்.சபூர் (நுரைசசோலை), எஸ்.எம்.எம்.முகைடீன் (கற்பிட்டி).

## உணவு பதனிடல் தொழிநுட்பம்

எஸ்.ராகில் (மட்டக்களப்பு), ஏ.யமுனா (கற்றபொல), கே.ராதிகா (நாவலப்பிட்டி) கே.நிரன்சலா (மட்டக்களப்பு), என்.சிறீவிஜி (நீர்வேலி), பி.எஸ். வளர்மதி (நாவலப்பிட்டி), கே.ரமேஷ்குமாரி (ராஜவெல்ல), வை.சாந்தஜோதி (கிளிநொச்சி), ரி.நதீஷயா (கிளிநொச்சி), எஸ்.தமயந்தி (கைதடி), எஸ்.மகிழ்தினி (பருத்தித்துறை), ஜே.எஸ்.டிலானி (மட்டக்களப்பு), என்.ஜே.டலிமா (மன்னார்), எஸ்.சுகிர்தா (வவுனியா), எஸ.தர்சிகா (யாழ்ப்பாணம்), ஏ.தோமஸ் (கிளிநொச்சி), ஏ.ஏ.ஜே.முஸ்விகா (தெல்தோட்ட), எம்.டினோஜினி (கிளிநொச்சி), எஸ்.துரைராசா (இளவாலை), என்.சாரணயா (ஆரையம்பதி 02), ஜே.ராகினி (முருங்கன்), பி.கே.இந்துமதி (நாவலப்பிட்டி), வி.மங்களேஸ்வரி (வவுனியா), எஸ.சுமதி (கற்றபொல), எஸ்.கஜந்தினி (இணுவில்).

எஸ்.பாலகிருஷ்ணன் (வவுனியா), எஸ்.தர்சினி (வவுனியா), என்.மதிவதனி (உரும்பிராய்), எஸ்.டயானா (யாழ்ப்பாணம்), ரி.ருசாந்தி (பருத்தித்துறை), ஏ.அன்ரனீற்றா (வவுனியா), எவ்.டியானா (கிளிநொச்சி), ஈ.குணசீலி (கிளிநொச்சி), எம்.சபேஷினி (வவுனியா), வி.அனுற்றா மாக்குவக் (மன்னார்), எம்.கொலில்லா (டொலஷ்பாக்), ரி.ஜோதிமலர் (குயின்ஸ்ரவுண் குறூப்), ரி.நாகலிங்கம் (வவுனியா), ஜி.எஸ்.அருஷியா (உடுதலவின்ன), பி.தர்சினி (நாவலப்பிட்டி), ரி.சுஜிர்ஜினி (சுன்னாகம்), பி.தர்மபாலன் (வவுனியா).

## கிறிஸ்தவம்

கே.யோகநாயகி (மட்டக்களப்பு), ஆர்.நிலாஜினி (அக்கரைப்பற்று), டி.ஜொய்சி (வவுனியா), எஸ்.கிளௌனசி (கொழும்பு-09), பி.ஜி.பெனான்டோ (மன்னார்), ரி.குலகோதி (பரந்தன்), எஸ்.விக்ரோறியா (பசறை), எஸ்.நியூற்றன் (முல்லைத்தீவு), ஜே.சுயந்த் (வவுனியா), எஸ்.சுதாகரன் (மன்னார்), ஜி.பிரியதர்சினி (மட்டக்களபபு), பி.பிரதீபா (மாத்தளை), எம்.ஏலாஸ் அங்கல்ஸ் (யாழ்ப்பாணம்), ஜி.மேரி குரானலா (அல்வாய்), எஸ்.சதாலோஜினி (மன்னார்), ஈ.ரகீப் (களிநொச்சி), எஸ்.ஜே.சி.சாமிலி (மாத்தளை), எஸ்.லுசானா (யாழ்ப்பாணம்), ரி.மலீஸ் குரூஸ் (சிலாவத்துறை), வி.ஜே.பிரதீபன் (முருங்கன்), எஸ்.ஜெயபவானி (பருத்தித்துறை), வி.அந்தோனியம்மா (மட்டக்களப்பு), பி.றொபேட்றீகன் (வவுனியா), எஸ்.சபோஜினி (யாழ்ப்பாணம), ஈ.சுகந்தினி (முல்லைத்தீவு), சி.பி.எல்.சுமிதரா (இளவாலை), ஈ.விமலராணி (புதுக்குடியிருப்பு), வி.ஜி.எஸ்.வி.பீரிஸ் (மன்னார்), ஏ.ஏ.பி.லாம்பேர்ட் (மன்னார்), ஈ.ஆர்.எல்.கொன்சிகா (அல்வாய்), ஜே.ஆர்.சசிகலா (முருங்கன்), ஜி.திரேஸ்னோஜெலின் (கிளிநொச்சி), ஜே.கியூ.என்.மிரண்டா (மன்னார்), என்.அபிலாஷினி (திருக்கோவில்-04),

எஸ்.ஏ.ஆர்.கொன்சி (மன்னார்), என்.நவநீதன் (மட்டக்களப்பு), எஸ்.பி.சசிகரன் (பண்டத்தரிப்பு), என்.சங்கரசாயி (களுவான்சிக்குடி). எல்.சி.தாரணிவக் (மன்னார்), எஸ்.எம்டெலிமா (மட்டக்களப்பு), ஏ.றினோடெல்ரன் (பளை), பி.நிருசா (மன்னார்), எஸ.பி.ஆர்.பிரசாந்தினி (புத்தளம்), வி. எம்.ஜெனிறறா (புத்தூர்), ஜே.பி.அன்ரனிதாஸ் (மன்னார்), ஏ.கிறேஸ் ஜெனிற்றா (தலவாக்கல), ஜே.ஜெனிற்றா நொலின் (பூண்டுலோயா), எஸ்.அக்னேஸ்மேரி (பூண்டுலோயா), எஸ்.ஓ.டொமினில்டா (மானிப்பாய்).

எம்.எம்.ஏ.திரேசா (யாழ்ப்பாணம்), ஏ.சகீலன் (புன்னாலைக்கட்டுவன்), எம்.அமலராணி (பருத்தித்துறை), ஆர்.ஜெனித்தா (உடுப்பிட்டி), ஏ.கியோம்ார் (நெடுந்தீவு), ஏ.அன்சனா (உரும்பிராய்), எஸ்.லாவணயா (உயரப்புலம்), ஜே.சி.செல்வறஜி (மாதகல்), எஸ்.அருளமேரி (யாழ்ப்பாணம்), ஈ.மேரி (திருநகர்), ஆர்.தாரணி (காரைநகர்), எம்.மோரீஸ் (திருநகர்), ரி.எச்.பிரசாந்தன் (யாழ்ப்பாணம்), எஸ்.மகாலிங்கம் (உரும்பிராய்), எம்.எழிலுக்கரசி (கிளிநொச்சி), ஏ.எவ்.லியோனா (கிளிநொச்சி), டி.சியாமளா (களிநொச்சி), ஈ.கிரிஷானி (நானாட்டான்), எஸ்.அருநததி (மன்னார்), பி.என்.கமலினி (மன்னார்), ரி.றிகெனிற்ரா (முல்லைத்தீவு).

ரி.செல்வராணி (முல்லைத்தீவு), ஏ.எம்.டெனிற்ரா (முல்லைத்தீவு), எவ்.மேரி வினோஜா (வவுனியா), ஜே.எவிஸ் சுவிற்ரா (வவுனியா), எஸ்.வி.மாயநாயகம் (வவுனியா), ஆர்.ஜே.சர்மிளா (திருகோணமலை), சி.வோஜினி (திருகோணமலை), கே.எல்.எஸ.நிரோஜினி (புத்தளம்), ரி.லஷ்மன் (தம்புலுவில் -01), எஸ்.சியாமளா (சம்மாந்துறை), கே.ஈ.பிரசாத் (பொத்துவில்- 09), என்.ஞானமலர் (கல்முனை), ரி.ராஜேஸ்வரி (மண்டூர்), எஸ்.பிரமிளா (மல்வத்தை-02), வி.கயானா (சமமாந்துறை), எம.யேசு (சம்மாந்துறை), டி.ஆர்.சில்வா (கொட்டான்தீவு), ஏ.ஜே.எம்.சசிகலா (மாம்புரி), என்.சுதர்சினி (கொட்டான்தீவு).

## ஆரம்பக்கல்வி

எம்.பி.நஸ்னா ரபி (ஆரையம்பதி), என்.ஊர்மிளா (கல்முனை), வி.தர்சினி (பருத்தித்துறை), பி.ஏகலிங்கம் (வாழைச்சேனை), எஸ்.ரூபவாணி (கல்முனை), எஸ்.இரத்தினசிங்கம் (புத்தூர்), கே.யோகநாயகி (மட்டக்களப்பு), கே.மீரா (மீசாலை), ரி.சுதர்சன் (வட்டுககோட்டை), எஸ்.யசோதா (மாங்குளம்), ஐ.எல்.எம்.றிஸ்வான் (சம்மாந்துறை), கே.பிரமிளா (கோப்பாய்).

(தொடரும்....)

# கெய்ரோவில் பொலிஸ் தடியடி; நெரிசலில் சிக்கி 23 பேர் பலி

## 30 பேர் வரை ஆபத்தான நிலையில்!

கெய்ரோவில் அகதிகள் முகாமில் பொலிஸ் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டதையடுத்து ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 23 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளனர்.

எகிப்து நாட்டின் கெய்ரோ நகரில் சூடான் நாட்டில் இருந்துவந்து குடியேறியவர்கள் அகதிகளாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த அகதிகள் தங்களுக்கு எகிப்து அரசு எந்தவித பாதுகாப்பு வசதியும் செய்து கொடுக்கவில்லை என்று புகார் கூறி போராட்டம் நடத்தி வந்தனர்.

இதையடுத்து, அந்த அகதிகளை வேறு இடத்துக்கு மாற்ற ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. வேறு இடத்துக்கு மாற்ற அகதிகள் பெயர்களைப் பதிவு செய்யும் பணி நடந்தது. பெயர் பதிவு செய்தவர்கள் வேறு இடத்துக்கு பஸ்களில் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டதால பெயர் பதிவு செய்ய ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு நின்றனர். அப்போது நெரிசல் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கூட்டத்தினரைக் கலைக்க எகிப்து பொலிஸார் தடியடிப் பிரயோகம் நடத்தினார்கள். இதனால் அகதிகள சிதறி ஓடியதால் நெரிசல் மேலும் அதிகமானது. பெண்களும் குழந்தைகளும் கீழே விழுந்தனர். ஓடியவர்கள் அவர்கள் மீது ஏறி மிதித்தபடி சென்றனர்.

இதன்போது தடியடியிலும் நெரிசலிலும் சிக்கி பெண்கள் குழந்தைகள் உட்பட 23பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அத்துடன் சுமார் 30 பேர் வரை படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்
2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே!
உங்கள் நன்மை கருதி
2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்
புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்
உங்கள் வலம்புரியில் வெளிவரும்!
வாங்கத் தவறாதீர்கள்!

# பா.ஜ.க தலைவர் பதவியிலிருந்து எல்.கே.அத்வானி விலகினார்

## புதிய தலைவராக ராஜ்நாத் சிங் தேர்வு

(மும்பை)

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் பதவியிலிருந்து நேற்று முன்தினம் எல்.கே.அத்வானி விலகினார். ஆர் எஸ்எஸ் நிர்பந்தமே பதவி விலகக் காரணம் எனக் கூறப்படுவதை அவர் நிராகரித்துள்ளார்.

இக்கட்சியின் புதிய தலைவராக 51 வயதான ராஜ்நாத் சிங் தேர்வு செய்யப பட்டுள்ளார்.

பதவி விலகல் கடிதத்தை கட்சியன் துணைத் தலைவருக்கு அத்வானி அனுப்பினார். அந்தக் கடிதம் ஏற்றுக் கொள்ளப பட்டது இதுதொடர்பாக நிருபர்களிடம் அத்வானி கூறுகையில்,

கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகப போவதாக சென்னையில் நடந்த கட்சியின் தேசிய செயற் குழுக் கூட்டத்தில் அறிவித்தேன். சொல்லியபடி விலகி விடடேன். புதிய தலைவராக ராஜ்நாத சிங்கை கட்சி முடிவு செய்து அறிவித்துள்ளது. அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். டில்லியில் அசோகா சாலையில் உள்ள கட்சியின தலைமையகத்தில் திங்கட்கிழமை காலை 9.30க்கு ராஜ்நாத் சிங் பதவியேற்பார்.



பா.ஜ.கவின் புதிய தலைவராக மும்பையில் சனிக்கிழமை தேர்வு செய்யப்பட்ட ராஜ்நாத் சிங்குக்கு பாராட்டு தெரிவிக்கிறார் முன்னாள் தலைவர் எல்.கே.அத்வானி

ராஜ்நாத் சிங்கின் தலைமையில் கட்சியின் வளர்ச்சி புதிய உயரத்தை எட்டும். உத்தரப்பிரதேசத்தில் அமைச்சர் முதல்வராக இருந்தபோதும், மத்தியில் வாஜ்பேயி அரசில் அமைச்சராக இருந்தபோதும அவர் நிர்வாகத்திறன் பளிச்சிட்டது. மக்களசெல்வாக்கு மிக்க தலைவர் அவர்.

ராஜ்நாத் சிங்கின் பதவிக்காலம் 2007 பெப்ரவரி மாதம் வரை. இருப்பினும், மேலும 3 ஆண்டுகளுக்கும் அவரை தலைவராக தேர்வுசெய்ய வாய்ப்பு உள்ளது என்றார். முன்னதாக ராஜ்நாத் சிங்குக்கு மாலை அணிவித்த அத்வானி, அவருக்கு இனிப்பு ஊட்டி மகிழ்ந்தார்.

நிருபர்களுக்கு அத்வானி பேட்டி அளித்தபோது ராஜ்நாத் சிங்கும் உடன் இருந்தார். (ந)

மனிதர்களின் வாழ்க்கையில் பலவிதமாக ஏற்றத் தாழ்வுகள் உண்டான போதிலும், முடிவில் நிலையான இன்பத்தையும் பரிபூரணமான பரதுகாப்பையும் அளிப்பது சமாதானம் தான்.

-ப்ராய்டு

வலம்புரி

## ஜனாதிபதியின் இந்தியப் பயணம் சமாதானத்தை வலியுறுத்தியதா?

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் தனது முதலாவது வெளி நாட்டுப்பயணமாக இந்திய விஜயத்தை வைத்துக் கொண்டார்.

பொதுவாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் இந்திய சார்புடையவர்கள் என்பதும், அவர்களுக்கு இந்திய ஆதரவு இருப்பதும் கடந்த கால அரசியல் அனுபவங்களில் இருந்து புரிந்து கொள்ளக்கூடிய விடயமாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி முதலாளித்துவ சார்புடையதாக இருப்பதனால் அதனது சாய்வு அமெரிக்காவின் பக்கமே இருக்கின்றது.

இதற்கு மேலாக 1983 யூலையில் இலங்கையில் நடந்த இனக்கலவரத்தின் மூலகர்த்தாக்கள் ஐக்கிய தேசியக்கட்சியினராக இருந்தமையால்,

இந்தியாவின் அதட்டல்கள்,மிரட்டல்கள் இந்தியா மீதான வெறுப்பை ஐக்கிய தேசியக் கட்சியிடம் மேலும் வலுப்படுத்தியது.

ஜே.ஆரின் ஆட்சியில் தமிழர்களுக்கு எதிராக நடத்த இனக்கலவரங்களை அப்போது இந்தியப்பிரதமராக இருந்த இந்திராகாந்தி வன்மையர்கக் கண்டித்தார்.

ஜே.ஆரை அழைத்து அதட்டினார். இவை காரணமாக ஐக்கிய தேசியக்கட்சிக்கு இந்தியா மீது 'காய்ச்சல்' இருக்கவே செய்தது.

இவற்றின் விளைவாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சி இலங்கையில் நடப்பதை இந்தியா அவ்வளவாக விரும்பவில்லை.

இவை இலங்கை -இந்திய உறவு நிலையில் குறிப்பிடப்படவேண்டியவை. இவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அவருக்கு கொடுக்கப்பட்ட வரவேற்பு அபாரம்.

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் ,பிரதமர் மன்மோகன்சிங் இருவருமே நேரில் சென்று அவரை வரவேற்றனர்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இந்திய விஜயத்தை மேற்கொண்டிருந்தபோதிலும் இப்படியொரு வரவேற்பு அவருக்கு கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும்.

அந்தளவிற்கு ஜனாதிபதி மகிந்தவிற்கு வரவேற்பு இருந்ததெனில், அது மகிந்த -இந்திய உறவுநிலையின்வலுப்பாடெனகூறிக்கொள்ளலாம்.

எதுவாயினும் ஜனாதிபதி மகிந்த தமிழகத்திற்குச் செல்லமுடியாமல் போனமை தமிழர்களின் ஒற்றுமைப்பாட்டிற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகி விட்டது.

கலைஞர் கருணாநிதியின் பலத்தோடு ஆட்சி நடத்தும் 'காங்கிரஸ்' சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்குமாறு மகிந்தவிடம் வலியுறுத்தியிருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இந்தியாவிற்கு அவர் மேற்கொண்ட விஜயத்தின் உள்நோக்கம் வேறாயினும் 'விடுதலைப் புலிகளுடன் பேசி ஓர் முடிபுக்கு வரவேண்டும்' என்ற வாசகமே இந்திய ஆட்சியாளர்களால் மகிந்தவின் காதுகளில் செபிக்கப்பட்ட மூல மந்திரமாகும்.

# கூட்டணிக் கட்சித் தலைவர்களுடன் மஹிந்த இவ்வாரம் விசேட சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு ஆதரவு அளிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே இவ்வாரம் விசேட சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மஹிந்தாவின் இந்தியப் பயணம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழநிலை ஆகியன குறித்து இந்தக் கூட்டத்தில விவாதிக்கப்படும் என தெரியவருகிறது.

மஹிந்தவின் இந்தியப்பயணத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் அரசாங்கத்திற்கு ஆதரவு அளிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் மஹிந்த ஆலோசனை நடத்தியிருந்தார்.

இதனிடையே, இலங்கை சமாதான முயற்சிகளின் அரசாங்கம் மேற்கொள்கின்ற எந்தத் தீர்மானத்திற்கும் ஒத்துழைக்கவும் சமாதான செயற்பாடுகளில் பங்களிப்பு செய்யவும் தாம் தயாராகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நாடு மீண்டும் யுத்ததிற்கு தள்ளப்படுவதை காண்பதற்கு தாம் தாம் விரும்பவில்லை என்றும் அனைத்துத்தரப்பினருடனும் கூடிய விரைவில் பேச்சுவார்த்தைகளை நடத்தி புத்தாண்டில் நிராந்தர சமாதானத்தை ஏற்படுத்திக்கொள்வதனை காண்பதே தமது எதிர்பார்ப்பொன்றும் சந்திரிகா குமாரதுங்க கூறியதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ற)

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ஆதரவு

## -இந்திய அமைச்சர் டி.ஆர்.பாலு

(சென்னை)

சேது சமுத்திரத் திட்டத்துக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதுவித ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்று இந்திய மத்திய கப்பல் தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் பயணமாக இந்தியா சென்ற மஹிந்தவை கடந்த வியாழக்கிழமை இவர் மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்.

அப்போது ,சேது சமுத்திரத் திட்டம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு இலங்கை ஜனாதிபதி ஆட்சேபம் எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் மறுநாள் செயதியாளர்களிடம் தெரிவித்தா பாலு. இரு நாடுகளும் நட்பு நாடுகள. ஆட்சேபம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் டி.ஆர்.பாலு மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலிருந்து வந்த நிபுணர் குழு பல தகவல்களை அளித்துள்ளது. அது குறித்து மகிழ்ச்சி தெரிவித்து இது போன்ற இரு நாட்டு நிபுணர்கள் சந்திப்பு அடிக்கடி நடக்க வேண்டும் என்று தெரிவித்தேன்.

இலங்கை நிபுணர்கள் எப்போது வந்தாலும் இந்தியா தன்னிடமுள்ள தகவல்களைப் பரிமாற்றிக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் எந்தப் பிரச்சினையாக இருந்தா லும் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். சுற்றுச் சூழல் பிரச்சினையைப் பொறுத்தவரை இது உலகளாவிய பிரச்சினை இத்திட்டத்தில் எந்தப் பிரச்சினை இருந்தாலும் அதற்குத் தீர்வு காண இந்தியா தயாராகவுள்ளது.

சேது சமுத்திரத்திட்டம் தற்போது திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றது. இதுவரை 25 இலட்சம் மீற்றர் கனவளவுக்கு கால்வாய் தோண்டப்பட்டிருக்கிறது திட்ட மிட்டபடி 2008ஆம் ஆண்டு நவம்பரில் இப்பணிகள் முடிவடையும் இத்திட்டம்நிறை வேற்றப்பட்டால் 424 கடல் மைல்கள் சுற்றிவரு வதிலிருந்து கப்பல்களின் நேரம் சேமிக்கப்படும் கடலோரங்களில் அதாவது கிழக்கு மேற்காகச் செல்லும் கப் பல்களுக்கு இது உதவிக்கரமாக இருக்கும் அத்துடன் இந்தியாவின் பாதுகாப்புக்கு இது மேலும் வலுச்சேர்க்கும் என்று குறிப்பிட்டார். (ற)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அரசு மீளக் கைப்பற்ற வேண்டும்

## -கொட்டகத்தெனிய வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளினால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை அரசாங்கம் மீளக் கையகப்படுத்த வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சகத்தின் பொலிஸ் ஆலோசகர் எச்.என்.ஜி.பி.கொட்டகதெனிய வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர்,மேலும் கூறுகையில்,

ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆகையால் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ள நிலங்களைக் கையகப்படுத்தி தமிழ் மக்களுக்கு அரச படைகள் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

அரசாங்கத்திடமிருந்து விடுதலைப்புலிகள் நிலங்களைப் பறித்துள்ளார்கள் சட்டவிரோதமாக விடுதலைப்புலிகள் அதைச் செய்திருக்கும் போது எமது பலத்தில் அரசாங்கம் அதைக் கையகப்படுத்த வேண்டும் இந்த நிலைப்பாட்டின் மூலம் விடுதலைப்புலிகளுடனான யுத்தம் கூட முன்னெடுக்கப்படலாம் என்றார். (ற)

# திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதி மக்களை கைதிகளாக வைத்திருக்கிறது இராணுவம்

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயப்பகுதியிலுள்ள 40 குடும்பத்தினரை இராணுவத்தினர் பிணைக்கைதிகளாக நடத்திவருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினரின் வன்முறைகளுக்கு எதிர்வினையாக பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டுவருகின்றது.

இதனையடுத்தே திருக்கேதீஸ்வரர் ஆலயத்தைச் சுற்றியுள்ள 40 குடும்பங்களையும் பிணைக்கைதிகள் போல் இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளதாக தெரியவருகிறது.

1990ஆம் ஆண்டு வன்முறைகளை அடுத்து இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களில் இந்த 40 குடும்பத்தினரும் அடங்குவார்.

சேதமடைந்துள்ள திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்பின் பின் இந்தக் குடும்பத்தினர் மீளவும் இந்தப் பகுதியில் குடியமர்த்தப்பட்டனர்.

தள்ளாடி பிரதான இராணுவமுகாம் இந்த ஆலயத்திற்குமிக அருகாமையில் அமைந்துள்ளது.

ஆலயம் உள்ளிட்ட பகுதிகள் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது, இந்த நிலையில் ஆலயத்தைச் சுற்றியுள்ள குடும்பத்தினர் உறவினர்களையோ நண்பர்களையோ தங்களது அனுமதி இன்றி வீடுகளில் தங்க வைக்கக் கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (த-9)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

உதவி அரச சட்டத்தரணி பதவிக்கான விண்ணப்பங்களை சட்டத்துறை மா அதிபதி திணைக்களம் கோரியுள்ளது.

இப்பதவிக்காக விண்ணப்பிப்போர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை சட்டத்துறைமா அதிபதி திணைக்களம், கொழும்பு 12 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்திற்கு அனுப்பப்படல் வேண்டும் என சட்டத்துறை மா அதிபதி கமலசபேசன் தெரிவித்துள்ளார்.(த-7)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



எதை நினைக்கிறாயோ அதுவாகவே நீ ஆகிவிடுவாய் ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்ற அவதார புருஷரிடம் உனது சுமையை நீ ஒப்படைக்கும் போது அவரை நினைக்காமல் உன்னால் இருக்க முடியாது அவரை நினைப்பதால் நீ அவரைப் போன்று ஆகிவிடுகிறாய. அவர் மீது உனக்கு அன்பு சுரக்கிறது.

சுவாமி விவேகானந்தர்

### புதிய வாக்காளர் பட்டியல்

# தயாரிக்கப்பட்ட பின்பே உள்ளூராட்சி தேர்தல் நடத்த ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பினை இழந்தவர்களின் பெயர்களை உள்ளடக்கிய புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும்வரை உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கவிடம் ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுள்ளது.

வாக்களர் பட்டியலில் இடம் பெறாதவர்களின் பெயர்களை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிக் குழுவினர் இந்தக் கோரிக்கையை தேர்தல் ஆணையாளரிடம் முன் வைத்துள்ளனர்.

2005ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் எதிர்வரும் ஏப்பிரல் மாதமளவில் முழுமை செய்யப்பட்டு விடும் என்றும் அதன் பின்னர் தேர்தலை நடத்த முடியும் என்றும் தேர் தல் ஆணையாளர் தெரிவித்ததாக ஐ.தே.க வின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ற)

# தமிழகக் கடலோரப் பகுதிகளில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

### விடுதலைப்புலிகளின் அச்சம் காரணமாக

(சென்னை)

தமிழகக் கரையோரப் பகுதிகளில் இந்திய மத்திய உளவுப் பிரிவு அதிகாரிகளின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் மூளும் அபாய நிலை காணப்படுவதால் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டிற்குள் நுழையக்கூடும் என்ற அச்சம் காரணமாக தமிழகக் கடலோரக் காவல் படையினரின் ரோந்துப் பணிகளும் தீவிரமடைந்துள்ளது.

இலங்கையிலிருந்து படகுகள் மூலம் அகதிகளின் வருகை,தமிழகத்தில் இருந்து விடுதலைப்புலிகளுக்கு எரிபொருட்கள், மருந்துவகைகள் கடத்தப்படுதல் என்பன தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கைச் சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்ட தமிழக மீனவர்கள், வெளிநாட்டு நிறுவனங்களுடன் கடற்தொழில் ஒப்பந்தம் செய்துள்ள தொழிலதிபர் கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் விபரங்களை உளவுப்பிரிவினர் சேகரித்துவருகின்றனர். (சு)

# சோதனை செய்வதாகத் தெரிவித்து ஆயுத முனையில் துணிகரத் திருட்டு

### வண்ணை. ஐயனார் கோவிலடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை. ஐயனார் கோவில் பகுதியில் நேற்று முன்தினமிரவு துணிகரத் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. வண்ணை. ஐயனார் கோவிலடியில் ராதா ஒழுங்கையில் உள்ள வீடொன்றிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பல லட்சம் பெறுமதியான நகைகளும், பணமும் திருடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை வீட்டிற்குச் சென்ற ஆயுதம் தாங்கிய சிலர் வீட்டைச் சோதனையிட வேண்டும் என தெரிவித்துள்ளனர். இதற்கு வீட்டு உரிமையாளர் மறுப்புத் தெரிவிக்க, அவர்கள் கூரையின் மேல் ஏறி சீற்றை உடைத்து உள்ளிறங்கி திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

சுமார் நான்கு மணி நேரமாக சமையல் அறை தொடக்கம் சுவாமியறை வரை தேடுதலில் ஈடுபட்ட அவர்கள் அங்கிருந்த சகல நகைகளையும் துருவித்துருவி தேடுதல் நடத்தி எடுத்துச் சென்றதாக கூறப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் அணிந்திருந்த நகைகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. இதேவேளை பக்கத்து வீட்டிற்குச் சென்ற திருடர்கள் அங்கிருந்த வயோதிபப் பெண்ணின் சங்கிலி மற்றும் காப்பைத் திருடிச் சென்றுள்ளனர்.

அவர்கள் வைத்திருந்த அட்டியலை தருமாறு கேட்டதாகவும் அது வங்கியில் அடகு வைக்கப்பட்டதாக தெரிவித்த போது அது தொடர்பானஅடகுச் சீட்டைக் காட்டுமாறு கோரியதுடன் அடகுச் சீட்டைக் காட்டிய பின்னர் திருடர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் குறைந்திருந்த போதும் மீண்டும் அது இடம்பெறத் தொடங்கியுள்ளமையானது மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (சு)

# ஏ.எல். பரீட்சைப் புள்ளிகளை மீளாய்வு செய்ய முடிவு

(கொழும்பு)

கடந்த வருடம் நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில்,குறிப்பிட்ட சில பாடங்களுக்கான பல்தேர்வு வினாக்களின் புள்ளிகள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், விவசாயம் ஆகிய பாடங்களின் பல்தேர்வு வினாக்களுக்கான புள்ளிகளே மீளாய்வு செய்யப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பல்தேர்வு வினாப்புள்ளிகளை கணனி மூலம் தரவுபடுத்தும்போது சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதனாலேயே அவற்றை மீளாய்வு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட 2005/2006 பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளின்படி யாழ். மாவட்டத்தில் மருத்துவப் பிரிவு, பொறியியல் பிரிவு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிகளில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு)

# அருணகிரி சிறிசெல்வம் வவுனியாவுக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு புதிய அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். நீண்ட காலமாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த அருணகிரி சிறிசெல்வம் வவுனியா மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (சு)

# ஓய்வுபெற்ற பிரிகேடியருக்கு மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவப் பேச்சாளர் பாலித பெர்னாண்டோவுக்கு மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அவர் விரைவில் பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் பொறுப்பில் நியமிக்கப்படக் கூடும் என்று கூறப்படுகின்றது. தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவுடன் சமகாலத்தில் இவர் படித்தவர் என்பதாலும் இந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (ற)

### மன்னாரில்

# இரு மீனவர்களைக் காணவில்லை

(மன்னார்)

மன்னாரில் இரு மீனவர்களைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு குழந்தைகளின் தந்தையான ஜெயராஸ் ரெரன்ஸ் (வயது-25) மற்றும் சண்முகம் கோவிந்தன் (வயது-36) ஆகிய இருவரும் பேசாலை கிடஸ்பதிரியைச் சேர்ந்தவர்கள்.

கடந்த 28 ஆம் திகதி இருவரையும் காணவில்லை என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் மன்னார் பொது மக்கள் ஒன்றியத்திடம் ஜெயராஜின் மனைவி சுபாஜினி (வயது-25), கோவிந்தனின் தாயார் சண்முகவேலு (வயது-56) ஆகியோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

டைபர் கிளாஸ் படகு மூலம் மன்னார் கடற் பிரதேசத்தில் 28ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற இருவரும் வீடு திரும்பவில்லை என் று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தலைமன்னார் பொலிஸாரிடமும் கடந்த 29 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற)

# கொழும்புத்துறைமுகத்தில் கடற்படையினர் பாரிய ஒத்திகை

கொழும்புத் துறைமுகப் பாதுகாப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் காலை கடற்படையினர் பாரிய ஒத்திகையில் ஈடுபட்டிருந்தனர். கோட்டையில் துறைமுக நுழைவாயில் பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்ட போதிலும் பின்னர் இது ஒத்திகை என்பது தெரிய வந்ததால் பதற்றம் தணிந்தது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது; கொழும்புத் துறைமுக பாதுகாப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் கடற்படையினர் பாரிய ஒத்திகையில் மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டன. நுழைவாயில் பாதுகாப்பு அரணில் இருந்த கடற்படையினரைச் சுட்டுக் கொன்று விட்டு தாக்குதல் அணி துறை முகத்துக்குள் நுழைவது போன்றும் அவர்களைக் கடற்படையினர் தடுத்து நிறுத்துவது போன்றும் இந்தப் பாரிய ஒத்திகை அமைந்திருந்தது. கோட்டையில் உள்ள நுழைவாயிலில் இந்த ஒத்திகை நடந்த போது குண்டு வெடிப்புப் போன்றும் துப்பாக்கிச் சூடு போன்றும் அதனால் கடற்படையினர் சிலர் உயிரிழந்து வீழ்வது போன்றும் படையினர் பாசாங்கு செய்தனர். இது உண்மையென நம்பி அங்கு பெரும் பதற்றம் ஏற்பட் டது. (ற)

# சொல்ஹெய்மின் இலங்கை விஜயத்திற்கு திகதி குறிப்பிடுவதில் சிக்கல் நிலையாம்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை விஜயத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் அனுமதி இதுவரை கிடைக்கவில்லை என நோர்வே தெரிவித்துள்ளது.

எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கை வரவிருக்கின்றார். அவ் விஜயத்தின் போது சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பது குறித்து அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் பேச்சுக்களை ஆரம்பிக்க இருகின்றார்.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாளை அமெரிக்காவுக்குச் செல்கின்றார். இதனால் எரிக்கின் இலங்கை விஜயம் தாமதம் அடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், மங்கள சமரவீர எதிர்வரும் 9 ஆம் திகதி டுபாயில் சந்தித்து பேசுவார் என்றும் அதன் போது இலங்கைக்கான விஜயத்தின் திகதி குறிப்பிடப்படும் என்றும் கூறப்பட்டது.

இது இவ்வாறிருக்க சமாதானத் தூதுவர் பணியில் எரிக் சொல்ஹெய்ம் இருப்பதை ஜே.வி.பி விரும்பவில்லை என்றும் இதனாலேயே அவரின் பயணம் குறித்த திகதி நிர்ணயிப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் கூறப்பட்டது. (சு-8)

# எதிர்க்கட்சிகளுடன் இணையுமாறு...

இலங்கையில் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்தால் மட்டுமே இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அதற்காக அனைத்துக் கட்சிகளுடனும் பேசி ஒரு இறுதி முடிவினை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கோரியுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட அரசியல் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.அதன் போது இலங்கையின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பாதுகாக்க ஒற்றையாட்சியின் கீழ் அதிகபட்ச அதிகாரம் வழங்கத்தான் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதன் போது கருத்துத் தெரிவித்த இந்தியப் பிரதமர், இலங்கையில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படும் தீமானங்களின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் அது வெற்றியளிக்கும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்தியா சென்றிருந்த ரணில் விக்கிரமசிங்க ,சமாதான முயற்சிகள் குறித்து தெரிவித்த கருத்துக்களையும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார். (சு-8)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.